## காப்பியங்கள்

**பருவம்-V CC9 கற்பித்தல் :7 தரப்புள்ளி : 6 பாடக்குறியீட்டு எண் : 18K5T09**

**நோக்கம்:** தமிழ்க் காப்பியங்களை அறிமுகப்படுத்துதல், காப்பியங்கள் கூறும் வாழ்வியல் அறங்களை உணர்த்துதல், காப்பியங்களில் காணப்படும் இலக்கியச் சுவையைப் பயிற்றுவித்தல்.

**அலகு – 1**

சிலப்பதிகாரம் - புகார்க் காண்டம் - கானல் வரி

**அலகு – 2**

மணிமேகலை 1 முதல் 10 காதைகள்

**அலகு – 3**

சீவக சிந்தாமணி – மண்மகள் இலம்பகம்

**அலகு – 4**

கம்பராமாயணம் - சுந்தர காண்டம் - திருவடிதொழுத படலம் (முழுமையும்)

**அலகு – 5**

பெரியபுராணம் - கண்ணப்ப நாயனார் புராணம் - தேம்பாவணி – வளன் சனித்த படலம் (37 பாடல்கள்) சீறாப்புராணம் - ஹிஜரத்துக் காண்டம் -பாத்திமா திருமணப் படலம் (1 முதல் 20 பாடல்கள்).

**பார்வை நூல்கள் :**

1. சிலப்பதிகாரம் - கழக வெளியீடு
2. மணிமேகலை - கழக வெளியீடு
3. சீவசிந்தாமணி - கழக வெளியீடு
4. கம்பராமாயணம் - கம்பன்கழக வெளியீடு, சென்னை.
5. தேம்பாவணி - வர்த்தமானன் பதிப்பகம், சென்னை – 17.
6. சீறாப்புராணம், எவி.எம். ஜாபர்தீன் நூர்ஜகான் டிரஸ்ட், 6 டி, பிரிம்ரோஸ் கார்டன் தேனாம்பேட்டை, சென்னை – 18.
7. வ.சுப.மாணிக்கம் - இரட்டைக்காப்பியங்கள்
8. கி.வ.ஜகந்நாதன் - தமிழ்க்காப்பியங்கள்.

( அனைத்து அலகுகளிலும் வினாக்கள் சமமாக அமைதல் வேண்டும் )



Scanned with CamScanner

அலகு — 1

# சிலப்பதிகாரம்

தமிழ் மொழியில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம். இந்நூல் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் மூன்று காண்டங்களையும், முப்பது காதைகளையும், 5001 வரிகளையும் உள்ளடக்கியது. புகார்க் காண்டம், 10 காதைகளையும், மதுரைக்காண்டம் 13 காதைகளையும், வஞ்சிக்காண்டம் 7 காதைகளையும் கொண்டது. இதன் பா வகை நிலை மண்டில ஆசிரியப்பா. அரும்பத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் போன்றோரின் உரைகளைப் பெற்ற சிறப்பிற்குரியது. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியாரால் சிறப்பிக்கப் பெற்றது. சிலப்பதிகாரம் மூன்று நிலைகளில் சிறப்பு பெற்று காணப்படுகிறது. அவை மூன்று உண்மைகளான அறம், பொருள், இன்பம் எனவும் சேர, சோழ, பாண்டிய நாடு என மூன்று நாடுகளையும் கோவலன், கண்ணகி, மாதவி என மூன்று கதைமாந்தர்களையும் மூன்று நகரங்களான புகார், மதுரை, வஞ்சி எனவும், முத்தமிழான இயல், இசை, நாடகம் எனவும், முதன்மை பெறும் சுவைகளுள் இன்பம், துன்பம், வீரம் போன்றனவும் மூன்று வேந்தர்களாக சேர, சோழன், பாண்டியன் எனும் நிலைகளில் சிறப்புடையதாக விளங்குகிறது. இந்நூலுக்கு முத்தமிழ்க் காப்பியம், முதன்மைக் காப்பியம், நாடகக் காப்பியம், பத்தினிக் காப்பியம், குடிமக்கள் காப்பியம், புதுமைக் காப்பியம், புரட்சிக் காப்பியம் உரையிடப்பட்ட பாட்டுடைச் செய்யுள் என்றெல்லாம் பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன. இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தது. இந்நூலில் "கானல்வரிக்காதை" நும் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.



Scanned with CamScanner

# கானல் வரி காதை

## 1. கட்டுரை

சித்திரப் படத்துள் புக்கு செழுங் கோட்டின் மலர் புனைந்து
மைத்தடம் கண் மணமகளிர் கோலம்போல் வனப்பு எய்தி
பத்தரும் கோடும் ஆணியும் நரம்பும் என்று
இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ் கையில் தொழுதுவாங்கி
பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல்
கண்ணிய செலவு விளையாட்டு கையூழ்
நண்ணிய குறும் போக்கு என்று நாட்டிய
எண் வகையால் இசை எழீஇப்
பண் வகையால் பரிவு தீர்ந்து
மரகத மணித்தாள் செறிந்த மணிக் காந்தள் மெல்விரல்கள்
பயிர் வண்டின் கிளைபோல பல்நரம்பின் மிசைப்படர
வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல்
சீருடன் உருட்டல் தெருட்டல் அள்ளல்
ஏர் உடைப் பட்டடை என இசையோர் வகுத்த
எட்டு வகையின் இசைக் கரணத்துப்
பட்ட வகை தன் செவியின் ஓர்த்து
ஏவலன் பின் பாணி யாது என
கோவலன் கை யாழ் நீட்ட அவனும்
காவிரியை நோக்கினவும் கடற் கானல் வரிப்பாணியும்
மாதவி தன் மனம் மகிழ வாசித்தல் தொடங்கும்மன்

## நடந்தாய் வாழி காவேரி

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அது ஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங் கற்பென்று 2
அறிந்தேன் வாழி காவேரி

மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல் அது ஓச்சி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி



Scanned with CamScanner

கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னும் மாதர் பெருங் கற்பு என்று
அறிந்தேன் வாழி காவேரி 3

விழவர் ஓதை, சிறந்து ஆர்ப்ப
நடந்தாய் வாழி காவேரி
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்த எல்லாம் வாய் காவா
மழவர் ஓதை வளவன் தன்
வளனே வாழி காவேரி. 4

## புகார் எம் ஊர்

கரிய மலர் நெடுங்கண் காரிகைமுன்
கடல் தெய்வம் காட்டிக் காட்டி
அரிய சூள் பொய்த்தார் அறன் இலர் என்று
ஏழையம் யாங்கு அறிகோம் ஐய
விரிகதிர் வெண் மதியும் மீன் கணமும்
ஆம் என்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையும் முத்தும் கண்டு ஆம்பல்
பொதி அவிழ்க்கும் புகாரே எம் ஊர் 5

காதலர் ஆகி கழிக் கானல்
கையுறை கொண்டு எம்பின் வந்தார்
ஏதிலர் தாம் ஆகி யாம் இரப்ப
நிற்பதை யாங்கு அறிகோம் ஐய!
மாதரார் கண்ணும் மதி நிழல் நீர்
இணைகொண்டு மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டு ஊசலாடும்
புகாரே எம் ஊர் 6

மோது முது திரையால் மொத்துண்டு
போந்து அசைந்து முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரி மணல்மேல் வண்டல்
உழுது அழிப்ப மாழ்கி ஐய!
போதை பரிந்து அசைய மெல் விரலால்
கொண்டு ஒச்சம் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார் கண்
போகாப் புகாரே எம் ஊர் 7



Scanned with CamScanner

## கவலைக்கு மருந்து

துறை மேய் வலம்புரி தோய்ந்து மணல் உழுத
தோற்றம் மாய்வான்
பொறை மலி பூம் புன்னைப் பூ உதிர்ந்து நுண்தாது
போர்க்கும் கானல்
நிறை மதி வாள் முகத்து நேர் கயல்
கண் செய்த
உறை மலி உய்யா நோய் ஊர் கணங்கு
மென் முலையே தீர்கும் போலும் 8

## தெரியாமல் போனதே

நிணம் கொள் புலால் உணங்கல் நின்று புள்
ஓப்புதல் தலைக்கீடு ஆக
கணம் கொள் வண்டு ஆர்த்து உலாம் கன்னி
நறு ஞாழல் கையில் ஏந்தி
மணம் கமழ் பூங் கானல் மன்னி
மற்று ஆண்டு ஓர்
அணங்கு உறையும் என்பது அறியேன் அறிவேனேல்
அடையேன் மன்னோ 9

வலை வாழ்நர் சேரி வலை உணங்கும் முன்றில்
மலர் கை ஏந்தி
விலை மீன் உணங்கல் பொருட்டாக
வேண்டு உருவம் கொண்டு வேறு ஓர்
கொலை வேல் நெடுங் கண்
கொடுங் கூற்றம் வாழ்வது
அலை நீர்த் தண்கானல் அறியேன்; அறிவேனேல்
அடையேன் மன்னோ! 10

## பெண்ணா இவள்?

கயல் எழுதி வில் எழுதி கார் எழுதிக் காமன்
செயல் எழுதித் தீர்ந்த முகம் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில் வாழ்நர் சீறூர்க்கே
அம் கண் ஏர் வானத்து அரவு அஞ்சி வாழ்வதுவே 11

எறி வளைகள் ஆர்ப்ப இருமருங்கும் ஓடும்
கறை கெழு வேல் கண்ணொடு கடும் கூற்றம் காணீர்
கடும் கூற்றம் காணீர் கடல் வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழு மென்சாயல் மகள் ஆயதுவே! 12



Scanned with CamScanner

புலவு மீன் வெள் உணங்கல் புள் ஒப்பிக் கண்டார்க்கு
அலவ நோய் செய்யும் அணங்கு இதுவோ காணீர்
அணங்கு இதுவோ காணீர் அடும்பு அமர் தண்கானல்
பிணங்கு நேர் ஐம்பால் ஓர் பெண் கொண்டதுவே! 13

## துன்பம் தந்ததிவை

பொழில் தரு நறு மலரே புது மணம் விரிமணலே
பழுது அறு திரு மொழியே பணை இள வனமுலையே
முழு மதி புரை முகமே முரிபுரு வில்இணையே
எழுது அரும்மின் இடையே எனை இடர்செய்தவையே 14

திரைவிரி தருதுறையே திரு மணல் விரி இடமே
விரைவிரி நறு மலரே மிடைதரு பொழில் இடமே
மரு விரி புரி குழலே மதி புரை திரு முகமே
இரு கயல் இணை விழியே எனை இடர் செய்தவையே 15

வளை வளர் தரு துறையே மணம் விரி தருபொழிலே
தளை அவிழ் நறு மலரே தனியவள் திரி இடமே
முளை வளர் இள நகையே முழு மதி புரை முகமே
இளையவள் இணை முலையே எனை இடர்
செய்தவையே 16

## துவளும் துடி இடை

கடல் புக்கு உயிர் கொன்று வாழ்வர் நின் ஐயர்
உடல் புக்கு உயிர் கொன்று வாழ்வை மன் நீயும்
மிடல் புக்கு அடங்காத வெம் முலையோ பாரம்
இடர் புக்கு இடுகும் இடை இழவல் கண்டாய் 17

கொடுங் கண் வலையால் உயிர் கொள்வான் நுந்தை
நெடுங் கண் வலையால் உயிர் கொல்வை மன் நீயும்
வடம் கொள் முலையான் மழை மின்னுப் போல
நுடங்கி உகும் மென் நுசுப்பு இழவல் கண்டாய் 18

ஓடும் திமில் கொண்டு உயிர் கொள்வர் நின் ஐயர்
கோடும் புருவத்து உயிர் கொல்வை மன் நீயும்
பீடும் பிறர் எவ்வம் பாராய் முலை சுமந்து
வாடும் சிறு மென் மருங்கு இழவல் கண்டாய்! 19



Scanned with CamScanner

## கண்களோ — காலனோ?

பவள உலக்கை கையால் பற்றி
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
குவளை அல்ல கொடிய கொடிய 20

புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றம் கூற்றம் 21

கள்வாய் நீலம் கையின் ஏந்தி
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வேல் அல்ல வெய்ய வெய்ய 22

சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்
சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய்
ஊர் திரை நீர்வேல் உழக்கித் திரிவான் பின்
சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய் 23

## கட்டுரை

ஆங்கு, கானல் வரிப் பாடல் கேட்ட மான் நெடுங்கண்
மாதவியும்
மன்னும் ஒர் குறிப்பு உண்டு இவன் தன் நிலை
மயங்கினான் என
கலவியால் மகிழ்ந்தாள் போல் புலவியால் யாழ் வாங்கி
தானும் ஓர் குறிப்பினள் போல் கானல் வரிப் பாடல் பாணி
நிலத் தெய்வம் வியப்பு எய்த நீள் நிலத்தோர் மனம் மகிழ
கலத்தொடு புணர்ந்து அமைத்த கண்டத்தால் பாடத்
தொடங்கும்மன் 24

## காவிரிப் பெண்ணே வாழ்க!

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப
மணிப் பூ ஆடை அது போர்த்துக்
கருங் கயல் கண் விழித்து ஒல்கி
நடந்தாய் வாழி காவேரி
கருங்கயல் கண் விழித்து ஒல்கி
நடந்த எல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி 25



Scanned with CamScanner

பூவார் சோலை மயில் ஆலப்
புரிந்து குயில்கள் இசை பாடக்
காமர் மாலை அருகு அசைய
நடந்தாய் வாழி காவேரி
நாம வேலின் திறம் கண்டே
அறிந்தேன் வாழி காவேரி 26

வாழி அவன் தன் வளநாடு
மகவாய் வளர்க்கும் தாய் ஆகி
ஊழி உய்க்கும் பேர் உதவி
ஒழியாய் வாழி காவேரி
ஊழி உய்க்கும் பேர் உதவி
ஒழியாது ஒழுகல் உயிர் ஓம்பும்
ஆழி ஆள் வான் பகல் வெய்யோன்
அருளே வாழி காவேரி 27

### புகார் எங்கள் ஊர்

தீங்கதிர் வாள் முகத்தாள் செவ்வாய் மணி முறுவல்
ஒவ்வா வேனும்
வாங்கும் நீர் முத்து என்று வைகலும் மால் மகன்
போல் வருதிர் ஐய
வீங்கு ஓதம் தந்து விளங்கு ஒளிய வெண் முத்தம்
விரை சூழ் கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர் போல் மீளும்
புகாரே எம் ஊர் 28

### ஆம்பல் மலரும் அழகு நகர்

மறையின் மணந்தாரை வன் பரதர் பாக்கத்து
மடவார் செங்கை
இறை வளைகள் தூற்றுவதை எழையம் எங்ஙனம்
யாங்குஅறிகோம் ஐய?
நிறை மதியும் மீனும் என அன்னம் நீள் புன்னை
அரும்பிப் பூத்த
பொறை மலி பூங் கொம்பு ஏற வண்டு ஆம்பல்
ஊதும்புகாரே எம் ஊர் 29

### மதுவும் மங்கையும்

உண்டாரை வெல் நறா ஊண், ஒளியாப் பாக்கத்துள் உறை
ஒன்று இன்றித்
தண்டா நோய் மாதர் தலைத் தருதி என்பது யாங்கு அறிகோம்
ஐய!



Scanned with CamScanner

வண்டல் திரை அழிப்ப கையால் மணல் முகந்து மதிமேல் நீண்ட
புண்தோய் வேல் நீர் மல்க மாதர் கடல் தூர்க்கும் புகாரே எம் ஊர் 30

## தோழியின் கவலை

புணர் துணையோடு ஆடும் பொறி அலவன் நோக்கி
இணர் ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வு ஒழியப் போன ஒலி திரை நீர்ச் சேர்ப்பன்
வணர் சுரி ஐம்பாலோய் வண்ணம் உணரேனால் 31

## தலைவி புலம்பல்

தம்முடைய தண்ணளியும் தாமும் தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ? விட்டு அகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால் 32

புன் கண்கூர் மாலைப் புலம்பும் என் கண்ணே போல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள் வாய் நெய்தால் நீ எய்தும் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண்டு அறிதியோ? 33

புள்இயல் மான்தேர் ஆழி போன வழி எல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று என் செய்கோ?
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய் மற்று எம்மோடு ஈங்கு
உள்ளாரோடு உள்ளாய் உணராய் மற்று என் செய்கோ? 34

நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந் திண்தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்கின்ற ஓதமே
பூந்தன் பொழிலே புணர்ந்து ஆடும் அன்னமே
ஈர்ந்தன் துறையே இதுதகாது என்னீரே 35

நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந் திண்தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் வாழ் கடல் ஓதம்
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய் மற்று எம்மொடு
தீர்ந்தாய் போல் தீர்ந்திலையேல் வாழி கடல் ஓதம்! 36

## அன்னை அறிந்தால் என்ன செய்வேன்?

நல் நித்திலத்தின் பூண் அணிந்து,
நலம் சார் பவளக் கலை உடுத்து



Scanned with CamScanner

செந், நெல் பழனக் கழனி தொறும்
திரை உலாவு கடல் சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத் திண்
கொடியோன் எய்த புதுப் புண்கள்
என்னைக் காணாவகை மறைத்தால்
அன்னை காணின் என் செய்கோ? 37

வாரித் தரள நகை செய்து
வண்செம் பவள வாய் மலர்ந்து
சேரிப் பரதர் வலை முன்றில்
திரை உலாவு கடல் சேர்ப்ப
மாரிப் பீரத்து அலர் வண்ணம்
மடவாள் கொள்ள கடவுள் வரைந்து
ஆர்இக் கொடுமை செய்தார்? என்று
அன்னை அறியின் என் செய்கோ? 38

புலவுற்று இரங்கி அது நீங்கப்
பொழில் தண்டலையில் புகுந்து உதிர்ந்த
கலவைச் செம்மல் மணம் கமழ
திரை உலாவு கடல் சேர்ப்ப
பல உற்று ஒருநோய் துணியாத
படர் நோய் மடவாள் தனி உழப்ப
அலவுற்று இரங்கி அறியா நோய்
அன்னை அறியின் என் செய்கோ? 39

## மயக்கும் மாலை பொழுது

இளை இருள் பரந்ததுவே எல் செய்வான் மறைந்தனனே
களைவு அரும் புலம்பு நீர் கண் பொழிஇ உகுத்தனவே
தளை அவிழ் மலர்க் குழலாய் தணந்தார் நாட்டு உளதாம்
கொல்
வளை நெகிழ எரி சிந்தி வந்த இம் மருள் மாலை 40

கதிரவன் மறைந்தனனே கார் இருள் பரந்ததுவே
எதிர்மலர் புரை உண்கண் எவ்வ நீர் உகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய் போனார் நாட்டு உளதாம் கொல்
மதி உமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த இம் மருள் மாலை? 41

பறவை பாட்டு அடங்கினவே பகல் செய்வான் மறைந்தனனே
நிறை நிலா நோய் கூர நெடுங்கண் நீர் உகுத்தனவே
துறு மலர் அவிழ் குழலாய் துறந்தார் நாட்டு உளதாம் கொல்
மறவை ஆய் என் உயிர்மேல் வந்த இம்மருள் மாலை
42



Scanned with CamScanner

## நம்மை மறப்பாரோ நம் தலைவர்?

கைதை வேலிக் கழிவாய் வந்து எம்
பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்
பொய்தல் அழித்துப் போனால் அவர் நம்
மையல் மனம் விட்டு அகல்வார் அல்லர் 43

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீ நல்கு என்றே நின்றார் ஒருவர்
நீ நல்கு என்றே நின்றார் அவர் நம்
மான் நேர் நோக்கம் மறப்பார் அல்லர் 44

அன்னம் துணையோடு ஆடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் அவர் நம்
பொன்னேர் சுணங்கின் போவார் அல்லர் 45

## வினை விளை காலம்

எனக்கேட்டு
கானல் வரி யான் பாட தான் ஒன்றின் மேல் மனம் வைத்து
மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள் என
யாழ் இசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துஉருத்தது
ஆகலின்
உவவு உற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக் கை
ஞெகிழ்ந்தனன் ஆய்
பொழுது ஈங்குக் கழிந்தது ஆகலின் எழுதும் என்று உடன்
எழாது
ஏவலாளர் உடன் சூழ்தர கோவலன் தான் போன பின்னர்
தாதவிழ் மலர்ச் சோலை ஓதை ஆயத்து ஒலி அவித்து
கையற்ற நெஞ்சினளாய் வையத்தின் உள் புக்கு
காதலனுடன் அன்றியே மாதவி தன்மனை புக்காள் ஆங்கு
மா இரு ஞாலத்து அரசு தலைவணங்கும்
சூழி யானை சுடர் வாட் செம்பியன்
மாலை வெண்குடை கவிப்ப
ஆழி மால்வரை அகவையா எனவே! 52

■ ■ ■



Scanned with CamScanner

# 7. கானல் வரி

யாழைத் தொழுது வாங்கிய மாதவி இசையை எழுப்பிப் பார்த்து, குற்றமின்மையைக் கண்டறிந்து, அதனைக் கோவலனிடம் தந்தாள். அவன் காவிரி ஆற்றையும் கடற்கரைச் சோலையையும் மையமாக வைத்து வரிப் பாடல்களை யாழில் இசைத்துப் பாடினான். தலைவன் தலைவியர் தம் களவொழுக்கம் உணர்த்தும் அகப்பொருள் துறை அமைந்த பாடல்களை அவன் பாட, அவற்றைத் தவறாகப் புரிந்து கொண்டாள் மாதவி. 'இவன் பாடிய பாடல்களில் ஒரு குறிப்பு உண்டு! இவன் வேறொருத்தியிடம் மயங்கினான் போலும்!' எனக் கருதிய அவள், யாழைத் தான் வாங்கினாள். தன்னுள்ளத்தே வேறொரு குறிப்பு இல்லையென்றாலும், அப்படி ஒரு குறிப்புத் தோன்றுமாறு அவளும் கானல் வரிப் பாடல்களைப் பாடினாள். யாழிசை மேல் ஊழ் வந்து தாக்க, கோவலன் மனம் திரிந்தது! 'மாயப் பொய் பல உடைய குலத்திலே பிறந்தவளாதலின், அக்குலத்திற்கு ஏற்பவே பாடினாள்!' எனக் கருதி அவளை அணைத்த கையை நெகிழ்த்தான். ஏவலர் சூழ்ந்துவர, மாதவியை விட்டு நீங்கினான். மனம் வருந்திய மாதவி தனியே வண்டியிலேறிக் காதலன் இன்றி மனை புகுந்தாள்.

Scanned with CamScanner

# மணிமேகலை

ஐம்பெருங்காப்பியங்களில் இரண்டாவதாக கூறப்படும் மணிமேகலை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் எழுதப்பட்டது. இதன் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டாகும். பௌத்த சமயம் சார்ந்த முதல் காப்பியமாகக் கருதப்படும் இந்நூல் 30 காதை 4286 பாடல்களை உடையது. இதற்கு "மணிமேகலை துறவு" என்ற பெயரும் உண்டு. இதன் பா வகை நிலைமண்டில ஆசிரியப்பா ஆகும். பெண்ணின் பெயரைக் கொண்ட முதல் காப்பியம் இதுவே. பரத்தமை, மது, களவு, கொலை போன்ற சமுதாய சீர்திருத்தத்தைப் பற்றி இக்காப்பிய பாடல்கள் வலியுறுத்தகின்றது. மேலும் உணவளித்தலின் சிறப்பைக் கூறுகிறது. ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று சிலப்பதிகாரமும் மணிமேகலையும் காப்பியங்களில் சிறப்பிக்கப்படுகின்றன. இத்தகைய பல சிறப்புகளை உடைய மணிமேகலையில் உள்ள "மலர்வனம் புக்க காதை" நும் பாடப்பகுதியாகும்.

Scanned with CamScanner

## 1. விழாவறை காதை

உலகம் திரியா ஓங்கு உயர் விழுச் சீர்
பலர் புகழ் மூதூர்ப் பண்பு மேம்படீஇய
ஓங்கு உயர் மலயத்து அருந் தவன் உரைப்ப
தூங்கு எயில் எறிந்த தொடித் தோள் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கி, முன் நின்று

'மண்ணகத்து என்-தன் வான் பதி-தன்னுள்
மேலோர் விழைய விழாக் கோள் எடுத்த
நால்-ஏழ் நாளினும் நன்கு இனிது உறைக' என
அமரர் தலைவன் ஆங்கு-அது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவார் ஆகலின்

Scanned with CamScanner

மெய்த் திறம் வழக்கு நன்பொருள் வீடு எனும்
இத் திறம் தம்-தம் இயல்பினின் காட்டும்
சமயக் கணக்கரும் தம் துறை போகிய
அமயக் கணக்கரும் அகலார் ஆகி
கரந்து உரு உய்தியக் கடவுளாளரும்

பரந்து ஒருங்கு ஈண்டிய பாடை மாக்களும்
ஐம் பெருங்குழுவும் எண் பேர் ஆயமும்
வந்து ஒருங்கு குழீஇ, 'வான்பதி-தன்னுள்
கொடித் தேர்த் தானைக் கொற்றவன் துயரம்
விடுத்த பூதம் விழாக்கோள் மறப்பின்

மடித்த செவ் வாய் வல் எயிறு இலங்க
இடிக் குரல் முழக்கத்து இடும்பை செய்திடும்
தொடுத்த பாசத்து தொல் பதி நரகரைப்
புடைத்து உணும் பூதமும் பொருந்தாதாயிடும்
மா இரு ஞாலத்து அரசு தலையீண்டும்

ஆயிரம் கண்ணோன் விழாக் கால்கொள்க' என
வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி,

Scanned with CamScanner

ஏற்று உரி போர்த்த இடி உறு முழக்கின்
கூற்றுக்கண் விளிக்கும் குருதி வேட்கை

முரசு கடிப்பு இகூஉம் முதுகுடிப் பிறந்தோன்
'திரு விழை மூதூர் வாழ்க!' என்று ஏத்தி
'வானம் மும் மாரி பொழிக! மன்னவன்
கோள் நிலை திரியாக் கோலோன் ஆகுக!
தீவகச் சாந்தி செய்தரு நல் நாள்

ஆயிரம் கண்ணோன்-தன்னோடு ஆங்கு உள
நால் வேறு தேவரும் நலத்தகு சிறப்பின்
பால் வேறு தேவரும் இப் பதிப் படர்ந்து -
மன்னன் கரிகால்வளவன் நீங்கிய நாள்
இந் நகர் போல்வதோர் இயல்பினது ஆகி -

பொன்-நகர் வறிதாப் போதுவர் என்பது
தொல் நிலை உணர்ந்தோர் துணிபொருள் ஆதலின்
தோரண வீதியும் தோம் அறு கோட்டியும்
பூரண-கும்பமும் பொலம் பாலிகைகளும்
பாவை-விளக்கும் பல உடன் பரப்புமின்

காய்க் குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக் கொடி வல்லியும் கரும்பும் நடுமின்
பத்தி வேதிகைப் பசும் பொன் தூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்

விழவு மலி மூதூர் வீதியும் மன்றமும்

பழ மணல் மாற்றுமின் புது மணல் பரப்புமின்
கதலிகைக் கொடியும் காழ் ஊன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்
நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலா
பதி வாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறு ஆக

வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறு அறி மரபின் அறிந்தோர்! செய்யுமின்
தண் மணல் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவிர்! பொருந்துமின்
ஒட்டிய சமயத்து உறு பொருள் வாதிகள்

பட்டி-மண்டபத்து பாங்கு அறிந்து ஏறுமின்
பற்றாமாக்கள்-தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின் -
வெண் மணல் குன்றமும் விரி பூஞ் சோலையும்
தண் மணல் துருத்தியும் தாழ் பூந் துறைகளும்

தேவரும் மக்களும் ஒத்து உடன் திரிதரும்
நால்-ஏழ் நாளினும் நன்கு அறிந்தீர்!' என
ஒளிறு வாள் மறவரும் தேரும் மாவும்
களிறும் சூழ்தர கண் முரசு இயம்பி
'பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரக்க!' என வாழ்த்தி
அணி விழா அறைந்தனன் அகநகர் மருங்கு-என்.

# 2. ஊரலர் உரைத்த காதை

நாவல் ஓங்கிய மா பெருந் தீவினுள்
காவல் தெய்வதம் தேவர்கோற்கு எடுத்த
தீவகச் சாந்தி செய்தரு நல் நாள்
மணிமேகலையொடு மாதவி வாராத்
தணியாத் துன்பம் தலைத்தலை மேல் வர

சித்திராபதி-தான் செல்லல் உற்று இரங்கி
தத்து அரி நெடுங் கண் தன் மகள் தோழி
வயந்தமாலையை 'வருக' எனக் கூஉய்
'பயம் கெழு மா நகர் அலர் எடுத்து உரை' என -
வயந்தமாலையும் மாதவி துறவிக்கு

அயர்ந்து, மெய் வாடிய அழிவினள் ஆதலின்
மணிமேகலையொடு மாதவி இருந்த
அணி மலர் மண்டபத்து அகவயின் செலீஇ
ஆடிய சாயல் ஆய் இழை மடந்தை
வாடிய மேனி கண்டு உளம் வருந்தி

'பொன் நேர்-அனையாய்! புகுந்தது கேளாய்!
உன்னோடு இவ் ஊர் உற்றது ஒன்று உண்டுகொல்?
"வேத்தியல் பொதுவியல் என்று இரு திறத்துக்
கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்
பண்யாழ்க் கரணமும் பாடைப் பாடலும்

தண்ணுமைக் கருவியும் தாழ் தீம் குழலும்
கந்துகக் கருத்தும் மடைநூல் செய்தியும்
சுந்தரச் சுண்ணமும் தூ நீர் ஆடலும்

Scanned with CamScanner

பாயல் பள்ளியும் பருவத்து ஒழுக்கமும்
காயக் கரணமும் கண்ணியது உணர்தலும்

கட்டுரை வகையும் கரந்து உறை கணக்கும்
வட்டிகைச் செய்தியும் மலர் ஆய்ந்து தொடுத்தலும்
கோலம் கோடலும் கோவையின் கோப்பும்
காலக் கணிதமும் கலைகளின் துணிவும்
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த

ஓவியச் செந் நூல் உரை நூல் கிடக்கையும் -
கற்று துறைபோகிய பொன் தொடி நங்கை
நல் தவம் புரிந்தது நாண் உடைத்து" என்றே
அலகு இல் மூதூர் ஆன்றவர் அல்லது
பலர் தொகுபு உரைக்கும் பண்பு இல் வாய்மொழி

'நயம்பாடு இல்லை நாண் உடைத்து' என்ற
வயந்தமாலைக்கு மாதவி உரைக்கும்
'காதலன் உற்ற கடுந் துயர் கேட்டு
போதல்செய்யா உயிரொடு நின்றே
பொன் கொடி மூதூர்ப் பொருளுரை இழந்து

நல் தொடி நங்காய்! நாணுத் துறந்தேன்
காதலர் இறப்பின் கனை எரி பொத்தி
ஊது உலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது
இன் உயிர் ஈவர் ஈயார் ஆயின்
நல் நீர்ப் பொய்கையின் நளி எரி புகுவர்

நளி எரி புகா அர் ஆயின் அன்பரோடு
உடன் உறை வாழ்க்கைக்கு நோற்று உடம்பு அடுவர் -
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்து
அத் திறத்தாளும் அல்லள் எம் ஆய்-இழை
கணவற்கு உற்ற கடுந் துயர் பொறா அள்

மணம் மலி கூந்தல் சிறுபுறம் புதைப்ப
கண்ணீர் ஆடிய கதிர் இள வன முலை
திண்ணிதின் திருகி தீ-அழல் பொத்தி
காவலன் பேர் ஊர் கனை எரி ஊட்டிய
மா பெரும் பத்தினி மகள் மணிமேகலை

அருந் தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத் தொழில் படா அள்
ஆங்கனம் அன்றியும் ஆய்-இழை! கேளாய்
ஈங்கு இம் மாதவர் உறைவிடம் புகுந்தேன்
மற வணம் நீத்த மாசு அறு கேள்வி

அறவண அடிகள் அடிமிசை வீழ்ந்து
மா பெருந் துன்பம் கொண்டு உளம் மயங்கி
காதலன் உற்ற கடுந் துயர் கூற
"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேர் இன்பம்

பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது அறிக!" என்று அருளி
ஐ-வகைச் சீலத்து அமைதியும் காட்டி
"உய் வகை இவை கொள்" என்று உரவோன் அருளினன்

மைத் தடங் கண்ணார் தமக்கும் எற் பயந்த

சித்திராபதிக்கும் செப்பு நீ என -
ஆங்கு-அவள் உரை கேட்டு அரும் பெறல் மா மணி
ஓங்கு திரைப் பெருங் கடல் வீழ்த்தோர் போன்று
மையல் நெஞ்சமொடு வயந்தமாலையும்
கையறுப் பெயர்ந்தனள் காரிகை திறத்து-என்.

## 3. மலர்வனம் புக்க காதை

வயந்தமாலைக்கு மாதவி உரைத்த
உயங்கு நோய் வருத்தத்து உரைமுன் தோன்றி
மா மலர் நாற்றம் போல் மணிமேகலைக்கு
ஏது-நிகழ்ச்சி எதிர்ந்துளது ஆதலின்
தந்தையும் தாயும் தாம் நனி உழந்த

வெந் துயர் இடும்பை செவிஅகம் வெதுப்ப
காதல் நெஞ்சம் கலங்கி காரிகை
மாதர் செங் கண் வரி வனப்பு அழித்து
புலம்பு நீர் உருட்டி பொதி அவிழ் நறு மலர்
இலங்கு இதழ் மாலையை இட்டு நீராட்ட -

மாதவி மணிமேகலை முகம் நோக்கி
தாமரை தண் மதி சேர்ந்தது போல
காமர் செங் கையின் கண்ணீர் மாற்றி
'தூ நீர் மாலை தூத்தகை இழந்தது

நிகர் மலர் நீயே கொணர்வாய்' என்றலும் -

மது மலர்க் குழலியொடு மா மலர் தொடுக்கும்
சுதமதி கேட்டு துயரொடும் கூறும்
'குரவர்க்கு உற்ற கொடுந் துயர் கேட்டு
தணியாத் துன்பம் தலைத்தலை எய்தும்
மணிமேகலை-தன் மதி முகம்-தன்னுள்

அணி திகழ் நீலத்து ஆய் மலர் ஒட்டிய
கடை மணி உகு நீர் கண்டனன் ஆயின்
படை இட்டு நடுங்கும் காமன் பாவையை
ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ?
பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்?

ஆங்கனம் அன்றியும் அணி-இழை! கேளாய்
ஈங்கு இந் நகரத்து யான் வரும் காரணம்
பாராவாரப் பல் வளம் பழுநிய
காராளர் சண்பையில் கௌசிகன் என்போன்
இரு பிறப்பாளன் ஒரு மகள் உள்ளேன்

ஒரு தனி அஞ்சேன் ஓரா நெஞ்சமோடு
ஆராமத்திடை அலர் கொய்வேன்-தனை
மாருதவேகன் என்பான் ஓர் விஞ்சையன்
திரு விழை மூதூர் தேவர்கோற்கு எடுத்த
பெரு விழாக் காணும் பெற்றியின் வருவோன்

தாரன் மாலையன் தமனியப் பூணினன்
பாரோர் காணாப் பலர் தொழு படிமையன் -
எடுத்தனன் எற் கொண்டு எழுந்தனன் விசும்பில்
படுத்தனன் ஆங்கு அவன் பான்மையேன் ஆயினேன்
ஆங்கு-அவன் ஈங்கு எனை அகன்று கண்மாறி

நீங்கினன் தன் பதி நெட்டிடை ஆயினும்

Scanned with CamScanner

மணிப் பூங் கொம்பர் மணிமேகலை தான்
தனித்து அலர் கொய்யும் தகைமையள் அல்லள்
பல் மலர் அடுக்கிய நல் மரப் பந்தர்
இலவந்திகையின் எயில் புறம் போகின்

உலக மன்னவன் உழையோர் ஆங்கு உளர்
விண்ணவர் கோமான் விழாக் கொள் நல் நாள்
மண்ணவர் விழையார் வானவர் அல்லது
பாடு வண்டு இமிரா பல் மரம் யாவையும்
வாடா மா மலர் மாலைகள் தூக்கலின்

"கை பெய் பாசத்துப் பூதம் காக்கும்" என்று
உய்யானத்திடை உணர்ந்தோர் செல்லார்
வெங்கதிர் வெம்மையின் விரி சிறை இழந்த
சம்பாதி இருந்த சம்பாதி வனமும்
தவா நீர்க் காவிரிப் பாவை-தன் தாதை

கவேரன் ஆங்கு இருந்த கவேர வனமும்
மூப்பு உடை முதுமைய தாக்கு அணங்கு உடைய
யாப்பு உடைத்தாக அறிந்தோர் எய்தார்

அருளும் அன்பும் ஆர் உயிர் ஓம்பும்
ஒரு பெரும் பூட்கையும் ஒழியா நோன்பின்

பகவனது ஆணையின் பல் மரம் பூக்கும்
உவவனம் என்பது ஒன்று உண்டு அதன் உள்ளது
விளிப்பு அறைபோகாது மெய் புறத்து இடூஉம்
பளிக்கறை மண்டபம் உண்டு அதன் உள்ளது
தூ நிற மா மணிச் சுடர் ஒளி விரிந்த

தாமரைப் பீடிகை-தான் உண்டு ஆங்கு இடின்
அரும்பு அவிழ்செய்யும் அலர்ந்தன வாடா
சுரும்பு இனம் மூசா தொல் யாண்டு கழியினும்
மறந்தேன் அதன் திறம் மாதவி கேளாய்
கடம் பூண்டு ஓர் தெய்வம் கருத்திடை வைத்தோர்

ஆங்கு அவர் அடிக்கு இடின் அவர் அடி-தான் உறும்
நீங்காது யாங்கணும் நினைப்பிலராய் இடின்
"ஈங்கு இதன் காரணம் என்னை!" என்றியேல்
"சிந்தை இன்றியும் செய் வினை உறும்" எனும்
வெந் திறல் நோன்பிகள் விழுமம் கொள்ளவும்

"செய் வினை, சிந்தை இன்று எனின் யாவதும்
எய்தாது" என்போர்க்கு ஏது ஆகவும்
பயம் கெழு மா மலர் இட்டுக்காட்ட
மயன் பண்டு இழைத்த மரபினது அது-தான்

Scanned with CamScanner

அவ் வனம் அல்லது அணி-இழை! நின் மகள்

செவ்வனம் செல்லும் செம்மை-தான் இலள்
'மணிமேகலையொடு மா மலர் கொய்ய
அணி இழை நல்லாய்! யானும் போவல்' என்று
அணிப் பூங் கொம்பர்-அவளொடும் கூடி
மணித் தேர் வீதியில் சுதமதி செல்வுழீஇ -

சிமிலிக் கரண்டையன் நுழை கோல் பிரம்பினன்
தவல்-அருஞ் சிறப்பின் அராந்தாணத்து உளோன்
நாணமும் உடையும் நன்கனம் நீத்து
காணா உயிர்க்கும் கையற்று ஏங்கி
உண்ணா நோன்போடு உயவல் யானையின்

மண்ணா மேனியன் வருவோன்-தன்னை
'வந்தீர் அடிகள்! நும் மலர் அடி தொழுதேன்
எம்-தம் அடிகள்! எம் உரை கேண்மோ
அழுக்கு உடை யாக்கையில் புகுந்த நும் உயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்று உளம் வருந்தாது

இம்மையும் மறுமையும் இறுதி இல் இன்பமும்
தன்வயின் தரூஉம் என் தலைமகன் உரைத்தது
கொலையும் உண்டோ கொழு மடல் தெங்கின்
விளை பூந் தேறலில் மெய்த் தவத்தீரே!
உண்டு தெளிந்து இவ் யோகத்து உறு பயன்

கண்டால் எம்மையும் கையுதிர்க்கொண்ம் என
உண்ணா நோன்பி-தன்னொடும் சூளுற்று
'உண்ம்' என இரக்கும் ஓர் களிமகன் பின்னரும் -

Scanned with CamScanner

கணவிர மாலையின் கட்டிய திரள் புயன்
குவி முகிழ் எருக்கின் கோத்த மாலையன்

சிதவர் துணியொடு சேண் ஓங்கு நெடுஞ் சினைத்
ததர் விழ்பு ஒடித்துக் கட்டிய உடையினன்
வெண் பலி சாந்தம் மெய்ம் முழுது உரீஇ
பண்பு இல் கிளவி பலரொடும் உரைத்து-ஆங்கு
அழூஉம் விழூஉம் அரற்றும் கூஉம்

தொழூஉம் எழூஉம் சுழலும் சுழலும்
ஓடலும் ஓடும் ஒரு சிறை ஒதுங்கி
நீடலும் நீடும் நிழலொடு மறலும்
மையல் உற்ற மகன் பின் வருந்தி
கையறு துன்பம் கண்டு நிற்குநரும் -

சுரியல் தாடி மருள் படு பூங் குழல்
பவளச் செவ் வாய் தவள வாள் நகை
ஒள் அரி நெடுங் கண் வெள்ளி வெண் தோட்டு
கருங் கொடிப் புருவத்து மருங்கு வளை பிறை நுதல்
காந்தள் அம் செங் கை ஏந்து இள வன முலை

அகன்ற அல்குல் அம் நுண் மருங்குல்
இகந்த வட்டுடை எழுது வரிக்கோலத்து
வாணன் பேர் ஊர் மறுகிடைத் தோன்றி
நீள் நிலம் அளந்தோன் மகன் முன் ஆடிய
பேடிக் கோலத்துப் பேடு காண்குநரும் -

வம்ப மாக்கல் கம்பலை மூதூர்
சுடுமண் ஓங்கிய நெடு நிலை மனைதொறும்
மை அறு படிவத்து வானவர் முதலா
எவ் வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய

கண் கவர் ஓவியம் கண்டு நிற்குநரும் -

விழவு ஆற்றுப் படுத்த கழி பெரு வீதியில்
பொன் நாண் கோத்த நன் மணிக் கோவை
ஐயவி அப்பிய நெய் அணி முச்சி
மயிர்ப் புறம் சுற்றிய கயிற்கடை முக் காழ்

பொலம் பிறைச் சென்னி நலம் பெறத் தாழ
செவ் வாய்க் குதலை மெய் பெறா மழலை
சிந்துபு சில் நீர் ஐம்படை நனைப்ப
அற்றம் காவாச் சுற்று உடைப் பூந் துகில்
தொடுத்த மணிக் கோவை உடுப்பொடு துயல்வர

தளர் நடை தாங்காக் கிளர் பூண் புதல்வரை
பொலந் தேர் மீமிசைப் புகர் முக வேழத்து
இலங்கு தொடி நல்லார் சிலர் நின்று ஏற்றி
'ஆல் அமர் செல்வன் மகன் விழாக் கால்கோள்
காண்மினோ' எனக் கண்டு நிற்குநரும் -

விராடன் பேர் ஊர் விசயன் ஆம் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்
மணிமேகலை-தனை வந்து புறம் சுற்றி
'அணி அமை தோற்றத்து அருந் தவப் படுத்திய
தாயோ கொடியள் தகவு இலள் ஈங்கு-இவள்

மா மலர் கொய்ய மலர்வனம்-தான் புகின்
நல் இள அன்னம் நாணாது ஆங்கு உள
வல்லுநகொல்லோ மடந்தை-தன் நடை ?
மா மயில் ஆங்கு உள வந்து முன் நிற்பன
சாயல் கற்பனகொலோ தையல்-தன்னுடன் ?

பைங் கிளி-தாம் உள பாவை-தன் கிளவிக்கு
எஞ்சலகொல்லோ ? இசையுந அல்ல' -
என்று இவை சொல்லி யாவரும் இனைந்து உக

செந் தளிர்ச் சேவடி நிலம் வடு உறாமல்
குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்

திலகமும் வகுளமும் செங் கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்து அலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முட முள் தாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங் கால் அசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ் சண்பகமும்

எரி மலர் இலவமும் - விரி மலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம் போர்த்ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்-தன்னைத்
தொழுதனள் காட்டிய சுதமதி-தன்னொடு

மலர் கொய்யப் புகுந்தனள் மணிமேகலை-என்.

# 4. பளிக்கறை புக்க காதை

'பரிதி அம் செல்வன் விரி கதிர்த் தானைக்கு
இருள் வளைப்புண்ட மருள் படு பூம்பொழில்
குழல் இசை தும்பி கொளுத்திக்காட்ட
மழலை வண்டு இனம் நல் யாழ்செய்ய
வெயில் நுழைபு அறியா குயில் நுழை பொதும்பர்

மயில் ஆடு அரங்கில் மந்தி காண்பன காண்!
மாசு அறத் தெளிந்த மணி நீர் இலஞ்சி
பாசடைப் பரப்பில் பல் மலர் இடை நின்று
ஒரு தனி ஓங்கிய விரை மலர்த் தாமரை

அரச அன்னம் ஆங்கு இனிது இருப்ப

கரை நின்று ஆலும் ஒரு மயில்-தனக்கு
கம்புள்-சேவல் கனை குரல் முழவா
கொம்பர் இருங் குயில் விளிப்பது காணாய்!
இயங்கு தேர் வீதி எழு துகள் சேர்ந்து
வயங்கு ஒளி மழுங்கிய மாதர் நின் முகம் போல்

விரை மலர்த் தாமரை கரை நின்று ஓங்கிய
கோடு உடை தாழைக் கொழு மடல் அவிழ்ந்த
வால் வெண் சுண்ணம் ஆடியது இது காண்!
மாதர் நின் கண் போது எனச் சேர்ந்து
தாது உண் வண்டு இனம் மீது கடி செங் கையின்

அம் சிறை விரிய அலர்ந்த தாமரைச்
செங் கயல் பாய்ந்து பிறழ்வன கண்டு ஆங்கு
எறிந்து அது பெறாஅது இரை இழந்து வருந்தி
மறிந்து நீங்கும் மணிச் சிரல் காண்!' என
பொழிலும் பொய்கையும் சுதமதி காட்ட

மணிமேகலை அம் மலர்வனம் காண்புழி -
மதி மருள் வெண்குடை மன்னவன் சிறுவன்
உதயகுமரன் - உரு கெழு மீது ஊர்
நீயான் நடுங்க நடுவு நின்று ஓங்கிய
கூம்பு முதல் முறிய வீங்கு பிணி அவிழ்ந்து

கயிறு கால் பரிய வயிறு பாழ்பட்டு ஆங்கு

Scanned with CamScanner

இதை சிதைந்து ஆர்ப்ப திரை பொரு முந்நீர்
இயங்கு திசை அறியாது யாங்கணும் ஓடி
மயங்கு கால் எடுத்த வங்கம் போல
காழோர் கையற மேலோர் இன்றி

பாகின் பிளவையின் பணை முகம் துடைத்து
கோவியன் வீதியும் கொடித் தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங் கலக்குறுத்து-ஆங்கு
இரு பால் பெயரிய உரு கெழு மூதூர்
ஒரு பால் படாஅது ஒரு வழித் தங்காது

பாகும் பறையும் பருந்தின் பந்தரும்
ஆதுல மாக்களும் அலவுற்று விளிப்ப
நீல மால் வரை நிலனொடு படர்ந்தெனக்
காலவேகம் களி மயக்குற்றென-
விடு பரிக் குதிரையின் விரைந்து சென்று எய்தி

கடுங்கண் யானையின் கடாத் திறம் அடக்கி
அணித் தேர்த் தானையொடு அரசு இளங் குமரன்
மணித் தேர்க் கொடிஞ்சி கையான் பற்றி
கார் அலர் கடம்பன் அல்லன் என்பது
ஆரங்கண்ணியின் சாற்றினன் வருவோன்-

நாடக மடந்தையர் நலம் கெழு வீதி
ஆடகச் செய்வினை மாடத்து ஆங்கண்
சாளரம் பொளித்த கால் போகு பெரு வழி
வீதி மருங்கு இயன்ற பூ அணைப் பள்ளி
தகரக் குழலாள்-தன்னொடு மயங்கி

மகர யாழின் வான் கோடு தழீஇ
வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்
எட்டிகுமரன் இருந்தோன்-தன்னை
'மாதர்-தன்னொடு மயங்கினை இருந்தோய்!
யாது நீ உற்ற இடுக்கண்!' என்றலும் -

ஆங்கு அது கேட்டு வீங்கு இள-முலையொடு

பாங்கில் சென்று தான் தொழுது ஏத்தி
மட்டு அவிழ் அலங்கல் மன்னன் குமரற்கு
எட்டிகுமரன் எய்தியது உரைப்போன்
'வகை வரிச் செப்பினுள் வைகிய மலர் போல்

தகை நலம் வாடி மலர் வனம் புகூஉம்
மாதவி பயந்த மணிமேகலையொடு
கோவலன் உற்ற கொடுந் துயர் தோன்ற
நெஞ்சு இறை கொண்ட நீர்மையை நீக்கி
வெம் பகை நரம்பின் என் கைச் செலுத்தியது

இது யான் உற்ற இடும்பை' என்றலும்
மது மலர்த் தாரோன் மனம் மகிழ்வு எய்தி
'ஆங்கு அவள்-தன்னை என் அணித் தேர் ஏற்றி
ஈங்கு யான் வருவேன்' என்று அவற்கு உரைத்து-ஆங்கு
ஓடு மழை கிழியும் மதியம் போல

மாட வீதியில் மணித் தேர் கடைஇ
கார் அணி பூம்பொழில் கடைமுகம் குறுக அத்
தேர் ஒலி மாதர் செவிமுதல் இசைத்தலும்
"சித்திராபதியோடு உதயகுமரன் உற்று
என்மேல் வைத்த உள்ளத்தான்" என

வயந்தமாலை மாதவிக்கு ஒரு நாள்
கிளந்த மாற்றம் கேட்டேன் ஆதலின்
ஆங்கு அவன் தேர் ஒலி போலும் ஆய்-இழை!
ஈங்கு என் செவிமுதல் இசைத்தது என் செய்கு?' என
அமுது உறு தீம் சொல் ஆய்-இழை உரைத்தலும்

சுதமதி கேட்டு துளக்குறு மயில் போல்
பளிக்கறை மண்டபம் பாவையைப் 'புகுக' என்று
ஒளித்து அறை தாழ் கோத்து உள்ளகத்து இரீஇ
ஆங்கு-அது-தனக்கு ஓர் ஐ-விலின் கிடக்கை
நீங்காது நின்ற நேர்-இழை-தன்னை

கல்லென் தானையொடு கடுந் தேர் நிறுத்தி
பல் மலர்ப் பூம்பொழில் பகல் முளைத்தது போல்
பூ மரச் சோலையும் புடையும் பொங்கரும்
தாமரைச் செங் கண் பரப்பினன் வரூஉம்
அரச இளங் குமரன் 'ஆரும் இல் ஒரு சிறை

ஒரு தனி நின்றாய்! உன் திறம் அறிந்தேன்
வளர் இள வன முலை' மடந்தை மெய்-இயல்
தளர் இடை அறியும் தன்மையள்கொல்லோ ?
விளையா மழலை விளைந்து மெல்-இயல்
முளை எயிறு அரும்பி முத்து நிரைத்தனகொல் ?

செங் கயல் நெடுங் கண் செவி மருங்கு ஓடி
வெங் கணை நெடு வேள் வியப்பு உரைக்கும்கொல் ?
மாதவர் உறைவிடம் ஒரீஇ மணிமேகலை
தானே தமியள் இங்கு எய்தியது உரை ? என-
பொதி-அறைப் பட்டோர் போன்று உளம் வருந்தி

மது மலர்க் கூந்தல் சுதமதி உரைக்கும்
'இளமை நாணி முதுமை எய்தி
உரை முடிவு காட்டிய உரவோன் மருகற்கு
அறிவும் சால்பும் அரசியல் வழக்கும்
செறி வளை மகளிர் செப்பலும் உண்டோ ?

அனையது ஆயினும் யான் ஒன்று கிளப்பல்
வினை விளங்கு தடக் கை விறலோய்! கேட்டி
வினையின் வந்தது வினைக்கு விளைவு ஆயது

புனைவன நீங்கின் புலால் புறத்திடுவது
மூப்பு விளிவு உடையது தீப் பிணி இருக்கை

பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்று அடங்கு அரவின் செற்றச் சேக்கை
அவலம் கவலை கையாறு அழுங்கல்
தவலா உள்ளம் தன்-பால் உடையது
மக்கள் யாக்கை இது என உணர்ந்து

மிக்கோய்! இதனைப் புறமறிப்பாராய்'
என்று அவள் உரைத்த இசை படு தீம் சொல்
சென்று அவன் உள்ளம் சேராமுன்னர்
பளிங்கு புறத்து எறிந்த பவளப் பாவையின்
இளங்கொடி தோன்றுமால் இளங்கோ முன்-என்.

## 5. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை

இளங்கோன் கண்ட இளம் பொன் பூங்கொடி
விளங்கு ஒளி மேனி விண்ணவர் வியப்ப
பொரு முகப் பளிங்கின் எழினி வீழ்த்து
திருவின் செய்யோள் ஆடிய பாவையின்
விரை மலர் ஐங் கணை மீன விலோ தனத்து

உருவிலாளனொடு உருவம் பெயர்ப்ப
ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன்

காவி அம் கண்ணி ஆகுதல் தெளிந்து
தாழ் ஒளி மண்டபம் தன் கையின் தடைஇச்
சூழ்வோன் சுதமதி-தன் முகம் நோக்கி

'சித்திரக் கைவினை திசைதொறும் செறிந்தன!
எத் திறத்தாள் நின் இளங்கொடி? உரை' என -
'குருகு பெயர்க் குன்றம் கொன்றோன்' அன்ன நின்
முருகச் செவ்வி முகந்து தன் கண்ணால்
பருகாள் ஆயின் பைந்தொடி நங்கை

ஊழ் தரு தவத்தள் சாப சரத்தி
காமற் கடந்த வாய்மையள்' என்றே
தூ மலர்க் கூந்தல் சுதமதி உரைப்ப-
'சிறையும் உண்டோ செழும் புனல் மிக்குழீஇ?
நிறையும் உண்டோ காமம் காழ்க்கொளின்?

செவ்வியள் ஆயின் என்? செவ்வியள் ஆக!' என
அவ்விய நெஞ்சமொடு அகல்வோன் ஆயிடை
'அம் செஞ் சாயல்! அராந்தாணத்துள் ஓர்
விஞ்சையன் இட்ட விளங்கு-இழை என்றே
கல்லென் பேர் ஊர்ப் பல்லோர் உரையினை

ஆங்கு-அவர் உறைவிடம் நீங்கி ஆய்-இழை!
ஈங்கு-இவள்-தன்னொடு எய்தியது உரை' என-

Scanned with CamScanner

'வார் கழல் வேந்தே! வாழ்க நின் கண்ணி!
தீ நெறிப் படரா நெஞ்சினை ஆகு-மதி!
ஈங்கு-இவள்-தன்னொடு எய்திய காரணம்

வீங்குநீர் ஞாலம் ஆள்வோய்! கேட்டருள்!
யாப்பு உடை உள்ளத்து எம் அனை இழந்தோன்
பார்ப்பன முதுமகன் படிம உண்டியன்
மழை வளம் தரூஉம் அழல் ஓம்பாளன்
பழ வினைப் பயத்தான் பிழை மணம் எய்திய

எற்கெடுத்து இரங்கி, தன் தகவு உடைமையின்
குரங்கு செய் கடல் குமரி-அம் பெருந் துறைப்
பரந்து செல் மாக்களொடு தேடினன் பெயர்வோன்
கடல் மண்டு பெருந் துறைக் காவிரி ஆடிய
வடமொழியாளரொடு வருவோன் கண்டு ஈங்கு

"யாங்கனம் வந்தனை என் மகள்?" என்றே
தாங்காக் கண்ணீர் என்-தலை உதிர்த்து-ஆங்கு
ஓதல் அந்தணர்க்கு ஒவ்வேன் ஆயினும்
காதலன் ஆதலின் கைவிடலீயான்
இரந்து ஊண் தலைக்கொண்டு இந் நகர் மருங்கில்

பரந்து படு மனைதொறும் திரிவோன் - ஒரு நாள்
புனிற்று-ஆப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினன்
கணவிர மாலை கைக்கொண்டென்ன
நிணம் நீடு பெருங் குடர் கைஅகத்து ஏந்தி
"என் மகள் இருந்த இடம்" என்று எண்ணி

தன் உறு துன்பம் தாங்காது புகுந்து

"சமணீர்காள்! நும் சரண்" என்றோனை
"இவண் நீர் அல்ல" என்று என்னொடும் வெகுண்டு
மை அறு படிவத்து மாதவர் புறத்து எமைக்
கையுதிர்க்கோடலின் கண் நிறை நீரேம்

"அறவோர் உளிரோ? ஆரும் இலோம்!" எனப்
புறவோர் வீதியில் புலம்பொடு சாற்ற-
மங்குல் தோய் மாட மனைதொறும் புகூஉம்
அங்கையில் கொண்ட பாத்திரம் உடையோன்
கதிர் சுடும் அமயத்துப் பனி மதி முகத்தோன்

பொன்னின் திகழும் பொலம் பூ ஆடையன்
"என் உற்றனிரோ?" என்று எமை நோக்கி
அன்புடன் அளைஇய அருள்மொழி-அதனால்
அஞ்செவி நிறைத்து நெஞ்சகம் குளிர்ப்பித்து
தன் கைப் பாத்திரம் என் கைத் தந்து ஆங்கு

எந்தைக்கு உற்ற இடும்பை நீங்க
எடுத்தனன் தழீஇ கடுப்பத் தலை ஏற்றி
மாதவர் உறைவிடம் காட்டிய மறையோன்
சா துயர் நீக்கிய தலைவன் தவ முனி
சங்கதருமன், தான் எமக்கு அருளிய-

எம் கோன் இயல் குணன் ஏதம் இல் குணப் பொருள்
உலக நோன்பின் பல கதி உணர்ந்து
தனக்கு என வாழாப் பிறர்க்கு உரியாளன்

Scanned with CamScanner

இன்பச் செவ்வி மன்பதை எய்த
அருளறம் பூண்ட ஒரு பெரும் பூட்கையின்

அறக் கதிர் ஆழி திறப்பட உருட்டி
காமற் கடந்த வாமன் - பாதம்
தகைபாராட்டுதல் அல்லது யாவதும்
மிகை நா இல்லேன் வேந்தே வாழ்க!' என-
'அம் சொல் ஆய்-இழை! நின் திறம் அறிந்தேன்

வஞ்சி நுண் இடை மணிமேகலை-தனைச்
சித்திராபதியால் சேர்தலும் உண்டு' என்று
அப் பொழில் ஆங்கு.அவன் அயர்ந்து போய பின்-
பளிக்கறை திறந்து பனி மதி முகத்துக்
களிக் கயல் பிறழாக் காட்சியள் ஆகி

"கற்புத் தான் இலள் நல் தவ உணர்வு இலள்
வருணக் காப்பு இலள் பொருள் விலையாட்டி" என்று
இகழ்ந்தனன் ஆகி நயந்தோன் என்னாது
புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம்
இதுவோ, அன்னாய்! காமத்து இயற்கை?

'இதுவே ஆயின் கெடுக தன் திறம்!' என
மது மலர்க் குழலாள் மணிமேகலை-தான்
சுதமதி-தன்னொடும் நின்ற எல்லையும்-
இந்திர கோடணை விழா அணி விரும்பி
வந்து காண்குறூஉம் மணிமேகலா தெய்வம்

பதிஅகத்து உறையும் ஓர் பைந்தொடி ஆகி
மணி அறைப் பீடிகை வலம் கொண்டு ஓங்கி

Scanned with CamScanner

'புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்
உலக நோன்பின் உயர்ந்தோய் என்கோ!
குற்றம் கெடுத்தோய் செற்றம் செறுத்தோய்

முற்ற உணர்ந்த முதல்வா என்கோ!
காமற் கடந்தோய் ஏமம் ஆயோய்
தீ நெறிக் கடும் பகை கடிந்தோய் என்கோ!
ஆயிர ஆரத்து ஆழி அம் திருந்து அடி
நா ஆயிரம் இலேன் ஏத்துவது எவன்?' என்று

எரி மணிப் பூங் கொடி இரு நில மருங்கு வந்து
ஒரு தனி திரிவது ஒத்து ஒதியின் ஒதுங்கி
நில வரை இறந்து ஓர் முடங்கு நா நீட்டும்
புல வரை இறந்த புகார் எனும் பூங்கொடி
பல் மலர் சிறந்த நல் நீர் அகழிப்

புள் ஒலி சிறந்த தெள் அரிச் சிலம்பு அடி
ஞாயில் இஞ்சி நகை மணி மேகலை
வாயில் மருங்கு இயன்ற வான் பணைத் தோளி
தருநிலை வச்சிரம் என இரு கோட்டம்
எதிர் எதிர் ஓங்கிய கதிர் இள வன முலை

ஆர் புனை வேந்தற்குப் பேர் அளவு இயற்றி
ஊழி எண்ணி நீடு நின்று ஓங்கிய
ஒரு பெருங் கோயில் திருமுகவாட்டி

Scanned with CamScanner

குண திசை மருங்கில் நாள் முதிர் மதியமும்
குட திசை மருங்கில் சென்று வீழ் கதிரும்

வெள்ளி வெண் தோட்டொடு பொன் தோடு ஆக
எள் அறு திருமுகம் பொலியப் பெய்தலும்-
அன்னச் சேவல், அயர்ந்து விளையாடிய
தன்னுறு பெடையைத் தாமரை அடக்க
பூம் பொதி சிதையக் கிழித்து பெடை கொண்டு

ஓங்கு இருந் தெங்கின் உயர் மடல் ஏற
அன்றில் பேடை அரிக் குரல் அழைஇ
சென்று வீழ் பொழுது சேவற்கு இசைப்ப
பவளச் செங் கால் பறவைக் கானத்து
குவளை மேய்ந்த குடக் கண் சேதா

முலை பொழி தீம் பால் எழு துகள் அவிப்ப
கன்று நினை குரல மன்று வழிப் படர
அந்தி அந்தணர் செந் தீப் பேண
பைந் தொடி மகளிர் பலர் விளக்கு எடுப்ப
யாழோர் மருதத்து இன் நரம்பு உளர

கோவலர் முல்லைக் குழல் மேற்கொள்ள
அமரக மருங்கில் கணவனை இழந்து
தமர்-அகம் புகூஉம் ஒரு மகள் போல
கதிர் ஆற்றுப்படுத்த முதிராத் துன்பமோடு
அந்தி என்னும் பசலை மெய்யாட்டி

வந்து இறுத்தனளால் மா நகர் மருங்கு-என்.

# 6. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை

அந்தி மாலை நீங்கிய பின்னர்,
வந்து தோன்றிய மலர் கதிர் மண்டிலம்
சான்றோர்-தம்-கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல
மாசு அறு விசும்பின் மறு நிறம் கிளர

ஆசு அற விளங்கிய அம் தீம் தண்கதிர்
வெள்ளி வெண் குடத்துப் பால் சொரிவது போல்
கள் அவிழ் பூம் பொழில் இடைஇடைச் சொரிய-
உருவு கொண்ட மின்னே போல
திருவில் இட்டுத் திகழ்தரு மேனியள்

ஆதி முதல்வன் அற ஆழி ஆள்வோன்
பாத பீடிகை பணிந்தனள் ஏத்தி
பதிஅகத்து உறையும் ஓர் பைந்தொடி ஆகி
சுதமதி நல்லாள் மதி முகம் நோக்கி
'ஈங்கு நின்றீர் என் உற்றீர் ?' என

ஆங்கு-அவள் ஆங்கு-அவன் கூறியது உரைத்தலும்
'அரசு இளங் குமரன் ஆய்-இழை-தன் மேல்
தணியா நோக்கம் தவிர்ந்திலன் ஆகி
அறத்தோர் வனம் என்று அகன்றனன் ஆயினும்

Scanned with CamScanner

புறத்தோர் வீதியில் பொருந்துதல் ஒழியான்

பெருந் தெரு ஒழித்து பெரு வனம் சூழ்ந்த
திருந்து எயில் குடபால் சிறு புழை போகி
மிக்க மாதவர் விரும்பினர் உறையும்
சக்கரவாளக் கோட்டம் புக்கால்
கங்குல் கழியினும் கடு நவை எய்தாது

அங்கு நீர் போம்' என்று அருந் தெய்வம் உரைப்ப-
'வஞ்ச விஞ்சையன் மாருதவேகனும்
அம் செஞ் சாயல் நீயும் அல்லது
நெடு நகர் மருங்கின் உள்ளோர் எல்லாம்
சுடுகாட்டுக் கோட்டம் என்று அலது உரையார்

சக்கரவாளக் கோட்டம் அஃது என
மிக்கோய்! கூறிய உரைப் பொருள் அறியேன்
ஈங்கு இதன் காரணம் என்னையோ?' என-
ஆங்கு-அதன் காரணம் அறியக் கூறுப ல
மாதவி மகளொடு வல் இருள் வரினும்

நீ கேள்' என்றே நேர்-இழை கூறும் 'இந்
நாமப் பேர் ஊர்-தன்னொடு தோன்றிய
ஈமப் புறங்காடு ஈங்கு-இதன் அயலது
ஊரா-நல்-தேர் ஒவியப் படுத்து
தேவர் புகுதரூஉம் செழுங் கொடி வாயிலும்

நெல்லும் கரும்பும் நீரும் சோலையும்

நல்வழி எழுதிய நலம் கிளர் வாயிலும்
வெள்ளி வெண் சுதை இழுகிய மாடத்து
உள் உரு எழுதா வெள்ளிடை வாயிலும்
மடித்த செவ் வாய் கடுத்த நோக்கின்

தொடுத்த பாசத்து பிடித்த சூலத்து
நெடு நிலை மண்ணீடு நின்ற வாயிலும்
நால் பெரு வாயிலும் பாற்பட்டு ஓங்கிய
காப்பு உடை இஞ்சிக் கடி வழங்கு ஆர் இடை
உலையா உள்ளமோடு உயிர்க் கடன் இறுத்தோர்

தலை தூங்கு நெடு மரம் தாழ்ந்து புறம் சுற்றி
பீடிகை ஓங்கிய பெரும் பலி முன்றில்
காடு அமர் செல்வி கழி பெருங் கோட்டமும்
அருந் தவர்க்கு ஆயினும் அரசர்க்கு ஆயினும்
ஒருங்கு உடன் மாய்ந்த பெண்டிர்க்கு ஆயினும்

நால் வேறு வருணப் பால் வேறு காட்டி
இறந்தோர் மருங்கில் சிறந்தோர் செய்த
குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்
அருந் திறல் கடவுள் திருந்து பலிக் கந்தமும்

நிறைக் கல் தெற்றியும் மிறைக் களச் சந்தியும்
தண்டும் மண்டையும் பிடித்து காவலர்
உண்டு கண் படுக்கும் உறையுள் குடிகையும்
தூமக் கொடியும் சுடர்த் தோரணங்களும்
ஈமப் பந்தரும் யாங்கணும் பரந்து

சுடுவோர் இடுவோர் தொடு குழிப் படுப்போர்
தாழ் வயின் அடைப்போர் தாழியில் கவிப்போர்
இரவும் பகலும் இளிவுடன் தரியாது
வருவோர் பெயர்வோர் மாறாச் சும்மையும்
எஞ்சியோர் மருங்கின் ஈமம் சாற்றி

நெஞ்சு நடுக்குறூஉம் நெய்தல் ஓசையும்
துறவோர் இறந்த தொழு விளிப் பூசலும்
பிறவோர் இறந்த அழு விளிப் பூசலும்
நீள் முக நரியின் தீ விளிக் கூவும்
சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும்

புலவு ஊண் பொருந்திய குராலின் குரலும்
ஊன் தலை துற்றிய ஆண்டலைக் குரலும்-
நல் நீர்ப் புணரி நளி கடல் ஓதையின்
இன்னா இசை ஒலி என்றும் நின்று அறாது
தான்றியும் ஒடுவையும் உழிஞ்சிலும் ஓங்கி

கான்றையும் சூரையும் கள்ளியும் அடர்ந்து
காய் பசிக் கடும் பேய் கணம் கொண்டு ஈண்டும்
மால் அமர் பெருஞ் சினை வாகை மன்றமும்-
வெண் நிணம் தடியொடு மாந்தி மகிழ் சிறந்து
புள் இறைகூரும் வெள்ளில் மன்றமும்-

சுடலை நோன்பிகள் ஒடியா உள்ளமொடு
மடை தீ உறுக்கும் வன்னி மன்றமும்-
விரத யாக்கையர் உடை தலை தொகுத்து- ஆங்கு
இருந் தொடர்ப் படுக்கும் இரத்தி மன்றமும்-

Scanned with CamScanner

பிணம் தின் மாக்கள் நிணம் படு குழிசியில்

விருந்தாட்டு அயரும் வெள்ளிடை மன்றமும்-
அழல் பெய் குழிசியும் புழல் பெய் மண்டையும்
வெள்ளில் பாடையும் உள்ளீட்டு அறுவையும்
பரிந்த மாலையும் உடைந்த கும்பமும்
நெல்லும் பொரியும் சில் பலி அரிசியும்

யாங்கணும் பரந்த ஓங்கு இரும் பறந்தலை-
தவத் துறை மாக்கள் மிகப் பெருஞ் செல்வர்
ஈற்று இளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
முதியோர் என்னான் இளையோர் என்னான்
கொடுந்தொழிலாளன் கொன்றனன் குவிப்ப இவ்

அழல் வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழி பெருஞ் செல்வக் கள்ளாட்டு அயர்ந்து
மிக்க நல் அறம் விரும்பாது வாழும்
மக்களின் சிறந்த மடவோர் உண்டோ ?
ஆங்கு அது-தன்னை ஓர் அருங் கடி நகர் என

சார்ங்கலன் என்போன் தனி வழிச் சென்றோன்-
என்பும் தடியும் உதிரமும் யாக்கை என்று
அன்புறு மாக்கட்கு அறியச் சாற்றி
வழுவொடு கிடந்த புழு ஊன் பிண்டத்து
அலத்தகம் ஊட்டிய அடி நரி வாய்க் கொண்டு

உலப்பு இல் இன்பமோடு உளைக்கும் ஓதையும்
கலைப் புற அல்குல் கழுகு குடைந்து உண்டு

Scanned with CamScanner

நிலைத்தலை நெடு விளி எடுக்கும் ஓதையும்
கடகம் செறித்த கையைத் தீநாய்
உடையக் கவ்வி ஒடுங்கா ஓதையும்

சாந்தம் தோய்ந்த ஏந்து இள வன முலை
காய்ந்த பசி எருவை கவர்ந்து ஊன் ஓதையும்
பண்பு கொள் யாக்கையின் வெண்பலி அரங்கத்து
மண் கணை முழவம் ஆக ஆங்கு ஓர்
கருந் தலை வாங்கி கைஅகத்து ஏந்தி

இரும் பேர் உவகையின் எழுந்து ஓர் பேய் மகள்
புயலோ குழலோ கயலோ கண்ணோ
குமிழோ மூக்கோ இதழோ கவிரோ
பல்லோ முத்தோ என்னாது இரங்காது
கண் தொட்டு உண்டு கவை அடி பெயர்த்து

தண்டாக் களிப்பின் ஆடும் கூத்துக்
கண்டனன் வெரீஇ கடு நவை எய்தி
விண்டு ஓர் திசையின் விளித்தனன் பெயர்ந்து "ஈங்கு
எம் அனை! காணாய்! ஈமச் சுடலையின்
வெம் முது பேய்க்கு என் உயிர் கொடுத்தேன்" என

தம் அனை-தன் முன் வீழ்ந்து மெய் வைத்தலும்
"பார்ப்பான்-தன்னொடு கண் இழந்து இருந்த இத்
தீத்தொழிலாட்டியேன் சிறுவன்-தன்னை
யாரும் இல் தமியேன் என்பது நோக்காது
ஆர் உயிர் உண்டது அணங்கோ? பேயோ?

துறையும் மன்றமும் தொல் வலி மரனும்
உறையுளும் கோட்டமும் காப்பாய்! காவாய்
தகவு இலைகொல்லோ சம்பாபதி!" என

Scanned with CamScanner

மகன் மெய் யாக்கையை மார்பு உறத் தழீஇ
ஈமப் புறங்காட்டு எயில் புற வாயிலில்

கோதமை என்பாள் கொடுந் துயர் சாற்ற-
"கடி வழங்கு வாயிலில் கடுந் துயர் எய்தி
இடை இருள் யாமத்து என்னை ஈங்கு அழைத்தனை
என் உற்றனையோ? எனக்கு உரை" என்றே
பொன்னின் பொலிந்த நிறத்தாள் தோன்ற

"ஆரும்இலாட்டியேன் அறியாப் பாலகன்
ஈமப் புறங்காட்டு எய்தினோன்-தன்னை
அணங்கோ பேயோ ஆர் உயிர் உண்டது
உறங்குவான் போலக் கிடந்தனன் காண்" என-
"அணங்கும் பேயும் ஆர் உயிர் உண்ணா

பிணங்கு நூல் மார்பன் பேது கந்தாக
ஊழ்வினை வந்து இவன் உயிர் உண்டு கழிந்தது
மா பெருந் துன்பம் நீ ஒழிவாய்" என்றலும்-
"என் உயிர் கொண்டு இவன் உயிர் தந்தருளில் என்
கண் இல் கணவனை இவன் காத்து ஓம்பிடும்

இவன் உயிர் தந்து என் உயிர் வாங்கு என்றலும்-
முது மூதாட்டி இரங்கினள் மொழிவோள்
"ஐயம் உண்டோ - ஆர் உயிர் போனால்
செய்வினை மருங்கின் சென்று பிறப்பு எய்துதல்?

ஆங்கு-அது கொணர்ந்து நின் ஆர் இடர் நீக்குதல்

ஈங்கு எனக்கு ஆவது ஒன்று அன்று நீ இரங்கல்
'கொலை அறம் ஆம்' எனும் கொடுந் தொழில் மாக்கள்
அவலப் படிற்று-உரை ஆங்கு-அது மடவாய்
உலக மன்னவர்க்கு உயிர்க்கு உயிர் ஈவோர்
இலரோ? இந்த ஈமப் புறங்காட்டு

அரசர்க்கு அமைந்தன ஆயிரம் கோட்டம்!
நிரயக் கொடு மொழி நீ ஒழி" என்றலும்-
"தேவர் தருவர் வரம் என்று ஒரு முறை
நான்மறை அந்தணர் நல்-நூல் உரைக்கும்
மா பெருந் தெய்வம்! நீ அருளாவிடின்

யானோ காவேன் என் உயிர் ஈங்கு" என-
"ஊழி முதல்வன் உயிர் தரின் அல்லது
ஆழித் தாழி அகவரைத் திரிவோர்
தாம் தரின் யானும் தருகுவன் மடவாய்!
ஈங்கு என் ஆற்றலும் காண்பாய்" என்றே

நால் வகை மரபின் அரூபப் பிரமரும்
நால்-நால் வகையின் உரூபப் பிரமரும்
இரு வகைச் சுடரும் இரு-மூவகையின்
பெரு வனப்பு எய்திய தெய்வத கணங்களும்
பல் வகை அசுரரும் படு துயர் உறூஉம்

எண் வகை நரகரும் இரு விசும்பு இயங்கும்
பல் மீன் ஈட்டமும் நாளும் கோளும்
தன் அகத்து அடக்கிய சக்கரவாளத்து

Scanned with CamScanner

வரம் தரற்கு உரியோர்-தமை முன் நிறுத்தி
"அரந்தை கெடும் இவள் அருந் துயர் இது" என

சம்பாபதி-தான் உரைத்த அம் முறையே
எங்கு வாழ் தேவரும் உரைப்பக் கேட்டே
கோதமை உற்ற கொடுந் துயர் நீங்கி
ஈமச் சுடலையில் மகனை இட்டு இறந்த பின்-
சம்பாபதி-தன் ஆற்றல் தோன்ற

எங்கு வாழ் தேவரும் கூடிய இடம்-தனில்
சூழ்-கடல் வளைஇய ஆழி-அம் குன்றத்து
நடுவு நின்ற மேருக் குன்றமும்
புடையின் நின்ற எழு-வகைக் குன்றமும்
நால் வகை மரபின் மா பெருந் தீவும்

ஓர் ஈர்-ஆயிரம் சிற்றிடைத் தீவும்
பிறவும் ஆங்கு-அதன் இடவகை உரியன
பெறு முறை மரபின் அறிவு வரக் காட்டி
ஆங்கு வாழ் உயிர்களும் அவ் உயிர் இடங்களும்
பாங்குற மண்ணீட்டில் பண்புற வகுத்து

மிக்க மயனால் இழைக்கப்பட்ட
சக்கரவாளக் கோட்டம் ஈங்கு-இது-காண்
இடு பிணக் கோட்டத்து எயில் புறம் ஆதலின்
சுடுகாட்டுக் கோட்டம் என்று அலது உரையார்
இதன் வரவு இது' என்று இருந் தெய்வம் உரைக்க-

மதன் இல் நெஞ்சமொடு வான் துயர் எய்தி
பிறந்தோர் வாழ்க்கை சிறந்தோள் உரைப்ப
இறந்து இருள் கூர்ந்த இடை இருள் யாமத்து
தூங்கு துயில் எய்திய சுதமதி ஒழிய
பூங்கொடி-தன்னைப் பொருந்தித் தழீஇ

அந்தரம் ஆறா ஆறு-ஐந்து யோசனைத்
தென் திசை மருங்கில் சென்று திரை உடுத்த
மணிபல்லவத்திடை மணிமேகலா தெய்வம்
அணி-இழை-தன்னை வைத்து அகன்றது-தான்-என்.

## 7. துயிலெழுப்பிய காதை

மணிமேகலை-தனை மணிபல்லவத்திடை
மணிமேகலா தெய்வம் வைத்து நீங்கி-
மணிமேகலை-தனை மலர்ப் பொழில்-கண்ட
உதயகுமரன் உறு துயர் எய்தி
'பங்குல் கழியில் என் கைஅகத்தாள்' என

பொங்கு மெல் அமளியில் பொருந்தாது இருந்தோன்
முன்னர்த் தோன்றி - 'மன்னவன் மகனே!
கோல் நிலை திரிந்திடின் கோள் நிலை திரியும்
கோள் நிலை திரிந்திடின் மாரி வறம் கூரும்
மாரி வறம் கூரின் மன் உயிர் இல்லை

மன் உயிர் எல்லாம் மண் ஆள் வேந்தன்-
தன் உயிர் என்னும் தகுதி இன்று ஆகும்
தவத் திறம் பூண்டோள் - தன்மேல் வைத்த
அவத் திறம் ஒழிக' என்று அவன்வயின் உரைத்த பின்-

உவவனம் புகுந்து ஆங்கு உறு துயில் கொள்ளும்

சுதமதி-தன்னைத் துயிலிடை நீக்கி
'இந்திர கோடணை இந் நகர்க் காணா
வந்தேன் அஞ்சல் மணிமேகலை யான்
ஆதிசால் முனிவன் அறவழிப்படூஉம்
ஏது முதிர்ந்தது இளங்கொடிக்கு ஆதலின்

விஞ்சையின் பெயர்த்து நின் விளங்கு-இழை-தன்னை ஓர்
வஞ்சம் இல் மணிபல்லவத்திடை வைத்தேன்
பண்டைப் பிறப்பும் பண்புற உணர்ந்து-ஈங்கு
இன்று ஏழ் நாளில் இந் நகர் மருங்கே
வந்து தோன்றும் மடக்கொடி நல்லாள்

களிப்பு மாண் செல்வக் காவல் பேர் ஊர்
ஒளித்து உரு எய்தினும் உன்திறம் ஒளியாள்
ஆங்கு-அவள் இந் நகர் புகுந்த அந் நாள்
ஈங்கு நிகழ்வன ஏதுப் பல உள
மாதவி-தனக்கு யான் வந்த வண்ணமும்

ஏதம் இல் நெறி மகள் எய்திய வண்ணமும்
உரையாய் நீ அவள் என் திறம் உணரும்-
"திரை இரும் பௌவத்துத் தெய்வம் ஒன்று உண்டு" என
கோவலன் கூறி இக் கொடி-இடை-தன்னை என்
நாமம் செய்த நல் நாள் நள் இருள்

"காமன் கையறக் கடு நவை அறுக்கும்
மா பெருந் தவக்கொடி ஈன்றனை" என்றே
நனவே போலக் கனவுஅகத்து உரைத்தேன்
ஈங்கு இவ் வண்ணம் ஆங்கு-அவட்கு உரை' என்று
அந்தரத்து எழுந்து-ஆங்கு அருந் தெய்வம் போய பின்

வெந் துயர் எய்தி சுதமதி எழுந்து ஆங்கு-
அகல் மனை அரங்கத்து ஆசிரியர்-தம்மொடு

Scanned with CamScanner

வகை தெரி மாக்கட்கு வட்டணை காட்டி
ஆடல் புணர்க்கும் அரங்கு இயல் மகளிரின்
கூடிய குயிலுவக் கருவி கண்-துயின்று

பண்ணுக் கிளை பயிரும் பண்-யாழ்த் தீம் தொடை
கொளை வல் ஆயமோடு இசை கூட்டுண்டு
வளை சேர் செங் கை மெல் விரல் உதைத்த
வெம்மை வெய்து உறாது தன்மையில் திரியவும்
பண்பு இல் காதலன் பரத்தமை நோனாது

உண் கண் சிவந்து-ஆங்கு ஒல்கு கொடி போன்று
தெருட்டவும் தெருளாது ஊடலொடு துயில்வோர்
விரைப் பூம் பள்ளி வீழ் துணை தழுவவும்
தளர் நடை ஆயமொடு தங்காது ஓடி
விளை யாடு சிறு தேர் ஈர்த்து மெய் வருந்தி

அமளித் துஞ்சும் ஐம்படைத் தாலி
குதலைச் செவ் வாய் குறு நடைப் புதல்வர்க்கு
காவல் பெண்டிர் கடிப்பகை எறிந்து
தூபம் காட்டி தூங்கு துயில் வதியவும்
இறை உறை புறவும் நிறை நீர்ப் புள்ளும்

கா உறை பறவையும் நா உள் அழுந்தி
விழவுக் களி அடங்கி முழவுக் கண் துயின்று
பழ விறல் மூதூர் பாயல் கொள் நடு நாள்
கோமகன் கோயில் குறு நீர்க் கன்னலின்
யாமம் கொள்பவர் ஏத்து ஒலி அரவமும்

உறையுள் நின்று ஒடுங்கிய உண்ணா உயக்கத்து
நிறை அழி யானை நெடுங் கூ விளியும்
தேர் வழங்கு தெருவும் சிற்றிடை முடுக்கரும்

ஊர் காப்பாளர் எறி துடி ஓதையும்
முழங்கு நீர் முன்-துறைக் கலம் புணர் கம்மியர்

துழந்து அடுகள்ளின் தோப்பி உண்டு அயர்ந்து
பழஞ் செருக்கு உற்ற அனந்தர்ப் பாணியும்
அர வாய்க் கடிப்பகை ஐயவிக் கடிப்பகை
விரவிய மகளிர் ஏந்திய தூமத்து
புதல்வரைப் பயந்த புனிறு தீர் கயக்கம்

தீர் வினை மகளிர் குளன் ஆடு அரவமும்
வலித்த நெஞ்சின் ஆடவர் இன்றியும்
புலிக் கணத்து அன்னோர் பூத சதுக்கத்து
'கொடித் தேர் வேந்தன் கொற்றம் கொள்க' என
இடிக் குரல் முழக்கத்து இடும் பலி ஓதையும்

ஈற்று இளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
கடுஞ் சூல் மகளிர் நெடும் புண் உற்றோர்
தம் துயர் கெடுக்கும் மந்திர-மாக்கள்
'மன்றப் பேய்மகள் வந்து கைக்கொள்க' என
நின்று எறி பலியின் நெடுங் குரல் ஓதையும்

பல் வேறு ஓதையும் பரந்து ஒருங்கு இசைப்ப-
கேட்டு உளம் கலங்கி ஊட்டு இருள் அழுவத்து
முருந்து ஏர் இள-நகை நீங்கிப் பூம்பொழில்
திருந்து எயில் குடபால் சிறு புழை போகி
மிக்க மா தெய்வம் வியந்து எடுத்து உரைத்த

சக்கரவாளக் கோட்டத்து-ஆங்கண்

Scanned with CamScanner

பலர் புகத் திறந்த பகு வாய் வாயில்
உலக அறவியின் ஒரு புடை இருத்தலும்-
கந்து உடை நெடு நிலைக் காரணம் காட்டிய
அந்தில் எழுதிய அற்புதப் பாவை

மைத் தடங் கண்ணாள் மயங்கினள் வெருவ
திப்பியம் உரைக்கும் தெய்வக் கிளவியின்
'இரவிவன்மன் ஒரு பெரு மகளே!
துரகத் தானைத் துச்சயன் தேவி!
தயங்கு இணர்க் கோதை தாரை சாவுற

மயங்கி யானை முன் மன் உயிர் நீத்தோய்!
காராளர் சண்பையில் கௌசிகன் மகளே!
மாருதவேகனோடு இந் நகர் புகுந்து
தாரை தவ்வை-தன்னொடு கூடிய
வீரை ஆகிய சுதமதி! கேளாய்!

இன்று ஏழ் நாளில் இடை இருள் யாமத்து
தன் பிறப்பு-அதனொடு நின் பிறப்பு உணர்ந்து ஈங்கு
இலக்குமி ஆகிய நினக்கு இளையாள் வரும்
அஞ்சல்' என்று உரைத்தது. அவ் உரை கேட்டு
நெஞ்சம் நடுக்குறூஉம் நேர் இழை நல்லாள்-

காவலாளர் கண் துயில்கொள்ள
தூ மென் சேக்கைத் துயில் கண் விழிப்ப
வலம்புரிச் சங்கம் வறிது எழுந்து ஆர்ப்ப
புலம் புரிச் சங்கம் பொருளொடு முழங்க
புகர் முக வாரணம் நெடுங் கூ விளிப்ப

Scanned with CamScanner

பொறி மயிர் வாரணம் குறுங் கூ விளிப்ப
பணை நிலைப் புரவி பல எழுந்து ஆல
பணை நிலைப் புள்ளும் பல எழுந்து ஆல
பூம்பொழில் ஆர்கைப் புள் ஒலி சிறப்ப
பூங்கொடியார் கைப் புள் ஒலி சிறப்ப

கடவுள் பீடிகைப் பூப் பலி கடைகொள
கலம் பகர் பீடிகைப் பூப் பலி கடை கொள
குயிலுவர் கடைதொறும் பண்-இயம் பரந்து எழ
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்து விழ
ஊர் துயில் எடுப்ப உரவுநீர் அழுவத்து

கார் இருள் சீத்து கதிரவன் முளைத்தலும்-
ஏ உறு மஞ்ஞையின் இனைந்து அடி வருந்த
மா நகர் வீதி மருங்கில் போகி
போய கங்குலில் புகுந்ததை எல்லாம்
மாதவி-தனக்கு வழு இன்று உரைத்தலும்-

நல் மணி இழந்த நாகம் போன்று அவள்
தன் மகள் வாராத் தனித் துயர் உழப்ப
இன் உயிர் இழந்த யாக்கையின் இருந்தனள்
துன்னியது உரைத்த சுதமதி-தான்-என்.

# 8. மணிபல்லவத்துத் துயருற்ற காதை

ஈங்கு இவள் இன்னணம் ஆக - இருங் கடல்
வாங்கு திரை உடுத்த மணிபல்லவத்திடை
தத்து நீர் அடைகரை சங்கு உழு தொடுப்பின்
முத்து விளை கழனி முரி செம் பவளமொடு

Scanned with CamScanner

விரை-மரம் உருட்டும் திரை உலாப் பரப்பின்

ஞாழல் ஓங்கிய தாழ் கண் அசும்பின்
ஆம்பலும் குவளையும் தாம் புணர்ந்து மயங்கி
வண்டு உண மலர்ந்த குண்டு நீர் இலஞ்சி
முடக் கால் புன்னையும் மடல் பூந் தாழையும்
வெயில் வரவு ஒழித்த பயில் பூம் பந்தர்

அறல் விளங்கு நிலா மணல் நறு மலர்ப் பள்ளித்
துஞ்சு துயில் எழூஉம் அம் சில்-ஓதி
காதல் சுற்றம் மறந்து கடைகொள
வேறு இடத்துப் பிறந்த உயிரே போன்று
பண்டு அறி கிளையொடு பதியும் காணாள்

கண்டு அறியாதன கண்ணில் காணா
நீல மாக் கடல் நெட்டிடை அன்றியும்
காலை ஞாயிறு கதிர் விரித்து முளைப்ப-
'உவவன மருங்கினில் ஓர் இடம்கொல் இது!
சுதமதி ஒளித்தாய்! துயரம் செய்தனை!

நனவோ கனவோ என்பதை அறியேன்!
மனம் நடுக்குறூஉம் மாற்றம் தாராய்!
வல் இருள் கழிந்தது மாதவி மயங்கும்
மெல்-வளை! வாராய் விட்டு அகன்றனையோ?
விஞ்சையின் தோன்றிய விளங்கு இழை மடவாள்

வஞ்சம் செய்தனள்கொல்லோ? அறியேன்!
ஒரு தனி அஞ்சுவென் திருவே வா!' எனத்

Scanned with CamScanner

திரை தவழ் பறவையும் விரி சிறைப் பறவையும்
எழுந்து வீழ் சில்லையும் ஒடுங்கு சிறை முழுவலும்
அன்னச் சேவல் அரசன் ஆக,

பல் நிறப் புள் இனம் பரந்து ஒருங்கு ஈண்டி
பாசறை மன்னர் பாடி போல
வீசு நீர்ப் பரப்பின் எதிர் எதிர் இருக்கும்
துறையும் துறை சூழ் நெடு மணல் குன்றமும்
யாங்கணும் திரிவோள் - பாங்கு இனம் காணாள்

குரல்-தலைக் கூந்தல் குலைந்து பின் வீழ
அரற்றினள் கூஉய் அழுதனள் ஏங்கி
வீழ் துயர் எய்திய விழுமக் கிளவியின்
தாழ் துயர் உறுவோள் தந்தையை உள்ளி
'எம் இதில் படுத்தும் வெவ் வினை உருப்ப

கோல் தொடி மாதரொடு வேற்று நாடு அடைந்து
வை வாள் உழந்த மணிப் பூண் அகலத்து
ஐயாவோ!" என்று அழுவோள் முன்னர்-
விரிந்து இலங்கு அவிர் ஒளி சிறந்து கதிர் பரப்பி
உரை பெறு மும் முழம் நிலமிசை ஓங்கி

திசைதொறும் ஒன்பான் முழ நிலம் அகன்று
விதி மாண் நாடியின் வட்டம் குயின்று
பதும சதுரம் மீமிசை விளங்கி
'அறவோற்கு அமைந்த ஆசனம்' என்றே
நறு மலர் அல்லது பிற மரம் சொரியாது

பறவைகள் முதிர் சிறை பாங்கர் சென்று அதிர்வது
தேவர் கோன் இட்ட மா மணிப் பீடிகை,
பிறப்பு விளங்கு அவிர் ஒளி அறத்தகை ஆசனம்
கீழ் நில மருங்கின் நாக நாடு ஆளும்
இருவர் மன்னவர் ஒரு வழித் தோன்றி

'எமது ஈது' என்றே எடுக்கல் ஆற்றார்
தம் பெரும் பற்று நீக்கலும் நீக்கார்
செங் கண் சிவந்து நெஞ்சு புகை உயிர்த்து
தம் பெருஞ் சேனையொடு வெஞ் சமம் புரி நாள்
'இருஞ் செரு ஒழிமின் எமது ஈது' என்றே

பெருந் தவ முனிவன் இருந்து அறம் உரைக்கும்
பொரு அறு சிறப்பின் புரையோர் ஏத்தும்
தரும பீடிகை - தோன்றியது ஆங்கு என்.

## 9. பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

ஆங்கு அது கண்ட ஆய்-இழை அறியாள்
காந்தள் அம் செங் கை, தலை மேல் குவிந்தன
தலைமேல் குவிந்த கையள் செங் கண்
முலை மேல் கலுழ்ந்து முத்தத் திரள் உகுத்து அதின்
இடமுறை மும் முறை வலமுறை வாரா
கொடி மின் முகிலொடு நிலம் சேர்ந்தென்ன

Scanned with CamScanner

இறு நடைப்பு அரச வெறு நிலம் சேர்ந்து ஆங்கு
எழுவோன் பிறப்பு வழு இன்று உணர்ந்து
தொழு தகை மாதவ! துணி பொருள் உணர்ந்தோய்!
காயங்கரையில் நீ உரைத்ததை எல்லாம்
வாயே ஆகுதல் மயக்கு அற உணர்ந்தேன்
காந்தாரம் என்னும் கழி பெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறை கெட வாழும்
அத்திபதை எனும் அரசு ஆள் வேந்தன்
மைத்துனன் ஆகிய பிரமதருமன்!
ஆங்கு-அவன்-தன்பால் அணைந்து அறன் உரைப்போய்
"தீம் கனி நாவல் ஓங்கும் இத் தீவிடை
இன்று ஏழ் நாளில் இரு நில மாக்கள்
நின்று நடுக்கு எய்த நீள் நில வேந்தே!
பூமி நடுக்குறூஉம் போழ்தத்து இந் நகர்
நாக நல் நாட்டு நானூறு யோசனை
வியன் பாதலத்து வீழ்ந்து கேடு எய்தும்
இதன்பால் ஒழிக" என இரு நில வேந்தனும்
மா பெரும் பேர் ஊர் மக்கட்கு எல்லாம்
"ஆவும் மாவும் கொண்டு கழிக" என்றே
பறையின் சாற்றி நிறை-அருந் தானையோடு
இடவயம் என்னும் இரும் பதி நீங்கி
வட வயின் அவந்தி மா நகர்ச் செல்வோன்
காயங்கரை எனும் பேர் யாற்று அடைகரை
சேய் உயர் பூம்பொழில் பாடி செய்து இருப்ப
எம் கோன் நீ ஆங்கு உரைத்த அந் நாளிடைத்
தங்காது அந் நகர் வீழ்ந்து கேடு எய்தலும்
மருள் அறு புலவ! நின் மலர் அடி-அதனை
அரசொடு மக்கள் எல்லாம் ஈண்டிச்
சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்து பல ஏத்திய

Scanned with CamScanner

அருளறம் பூண்ட ஒரு பேர் இன்பத்து
உலகு துயர் கெடுப்ப அருளிய அந் நாள்-
அரவக் கடல் ஒலி அசோதரம் ஆளும்
இரவிவன்மன் ஒரு பெருந்தேவி
அலத்தகச் சீறடி அமுதபதி வயிற்று

இலக்குமி என்னும் பெயர் பெற்றுப் பிறந்தேன்
அத்திபதி எனும் அரசன் பெருந்தேவி
சித்திபுரம் ஆளும் சீதரன் திருமகள்
நீலபதி எனும் நேர்-இழை வயிற்றில்
காலை ஞாயிற்றுக் கதிர் போல் தோன்றிய

இராகுலன்-தனக்குப் புக்கேன் அவனொடு
பராவரும் மரபின் நின் பாதம் பணிதலும்
"எட்டு-இரு நாளில் இவ் இராகுலன்-தன்னைத்
திட்டிவிடம் உணும் செல் உயிர் போனால்
தீ-அழல் அவனொடு சேயிழை மூழ்குவை

ஏது-நிகழ்ச்சி ஈங்கு இன்று ஆதலின்
கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய
தவாக் களி மூதூர்ச் சென்று பிறப்பு எய்துதி
அணி-இழை! நினக்கு ஓர் அருந் துயர் வரு நாள்
மணிமேகலா தெய்வம் வந்து தோன்றி

அன்று அப் பதியில் ஆர் இருள் எடுத்து
தென் திசை மருங்கில் ஓர் தீவிடை வைத்தலும்
வேக வெந் திறல் நாக நாட்டு அரசர்
சின மாசு ஒழித்து மன மாசு தீர்த்து-ஆங்கு

அறச் செவி திறந்து மறச் செவி அடைத்து

பிறவிப் பிணி மருத்துவன் இருந்து அறம் உரைக்கும்
திருந்து ஒளி ஆசனம் சென்று கைதொழுதி
அன்றைப் பகலே உன் பிறப்பு உணர்ந்து ஈங்கு
இன்று யான் உரைத்த உரை தெளிவாய்" என,
சா துயர் கேட்டுத் தளர்ந்து உகு மனத்தேன்

"காதலன் பிறப்பும் காட்டாயோ?" என
"ஆங்கு உனைக் கொணர்ந்த அரும் பெருந் தெய்வம்
பாங்கில் தோன்றி 'பைந்தொடி! கணவனை
ஈங்கு-இவன்' என்னும்" என்று எடுத்து ஓதினை
ஆங்கு அத் தெய்வம்தம் வாராதோ?' என

ஏங்கினள் அழூஉம் இளங்கொடி.தான்-என்.

## 10. மந்திரம் கொடுத்த காதை

'அறவோன் ஆசனத்து ஆய்-இழை அறிந்த
பிறவியள் ஆயினள் பெற்றியும் ஐது' என
விரை மலர் ஏந்தி விசும்பூடு இழிந்து
பொரு அறு பூங் கொடி பூமியில் பொலிந்தென
வந்து தோன்றிய மணிமேகலா தெய்வம்

முந்தைப் பிறப்பு எய்தி நின்றோள் கேட்ப
'உயிர்கள் எல்லாம் உணர்வு பாழாகி
பொருள் வழங்கு செவித் துளை தூர்ந்து அறிவு இழந்த
வறம் தலை உலகத்து அறம் பாடு சிறக்க
சுடர் வழக்கு அற்றுத் தடுமாறுகாலை ஓர்

இளை வளை ஞாயிறு தோன்றியதென்ன
நீயோ தோன்றினை நின் அடி பணிந்தேன்
நீயே ஆகி நிற்கு அமைந்த இவ் ஆசனம்
நாமிசை வைத்தேன் தலைமிசைக் கொண்டேன்
பூமிசை ஏற்றினேன் புலம்பு அறுக' என்றே

வலம் கொண்டு ஆசனம் வணங்குவோள் முன்னர்
பொலம்-கொடி நிலமிசைச் சேர்ந்தெனப் பொருந்தி
'உன் திருவருளால் என் பிறப்பு உணர்ந்தேன்
என் பெருங் கணவன் யாங்கு உளன் ?' என்றலும்-
'இலக்குமி! கேளாய் இராகுலன்-தன்னொடு

புலத்தகை எய்தினை பூம்பொழில் அகவயின்
இடங்கழி காமமொடு அடங்கானாய் அவன்
மடந்தை மெல் இயல் மலர் அடி வணங்குழி-
சாதுசக்கரன் மீவிசும்பு திரிவோன்
தெருமரம் ஒழித்து-ஆங்கு இரத்தினத் தீவத்துத்

தரும சக்கரம் உருட்டினன் வருவோன்
வெங்கதிர் அமயத்து வியன் பொழில் அகவயின்
வந்து தோன்றலும் - மயங்கினை கலங்கி
மெல்-இயல்! கண்டனை மெய்ந் நடுக்குற்றனை
நல்கூர் நுசுப்பினை நாணினை இறைஞ்ச

இராகுலன் "வந்தோன் யார் ?" என வெகுளலும்
விரா மலர்க் கூந்தல்! அவன் வாய் புதையா
"வானூடு இழிந்தோன் மலர் அடி வணங்காது
நா நல்கூர்த்தனை" என்று அவன்-தன்னொடு
பகை அறு பாத்தியன் பாதம் பணிந்து-ஆங்கு

"அமர! கேள் நின் தமர் அலம் ஆயினும்
அம் தீம் தண்ணீர் அமுதொடு கொணர்கேம்
உண்டி யாம் உன் குறிப்பினம்" என்றலும்
"எம் அனை! உண்கேன் ஈங்குக் கொணர்க" என
அந் நாள் அவன் உண்டருளிய அவ் அறம்

நின்னாங்கு ஒழியாது நின் பிறப்பு அறுத்திடும்
உவவன மருங்கில் உன்பால் தோன்றிய
உதயகுமரன்-அவன் உன் இராகுலன்
ஆங்கு-அவன் அன்றியும் அவன்பால் உள்ளம்
நீங்காத் தன்மை நினக்கும் உண்டு ஆகலின்

கந்தசாலியின் கழி பெரு வித்து ஓர்
வெந்து உகு வெங் களர் வீழ்வது போன்ம் என
அறத்தின் வித்து ஆங்கு ஆகிய உன்னை ஓர்
திறப்படற்கு ஏதுவா சேயிழை! செய்தேன்
இன்னும் கேளாய் இலக்குமி! நீ நின்

தவ்வையர் ஆவோர் தாரையும் வீரையும்
ஆங்கு-அவர்-தம்மை அங்க நாட்டு அகவயின்
கச்சயம் ஆளும் கழல் கால் வேந்தன்
துச்சயன் என்போன் ஒருவன் கொண்டனன்
அவருடன் ஆங்கு-அவன் அகல் மலை ஆடி

கங்கைப் பேர் யாற்று அடைகரை இருந்துழி-
மற வணம் நீத்த மாசு அறு கேள்வி
அறவணன் ஆங்கு-அவன்பால் சென்றோனை
"ஈங்கு வந்தீர் யார்?" என்று எழுந்து அவன்
பாங்கு உளி மாதவன் பாதம் பணிதலும்-

"ஆதி முதல்வன் அற ஆழி ஆள்வோன்
மா துயர் எவ்வம் மக்களை நீக்கி
விலங்கும் தம்முள் வெரூஉம் பகை நீக்கி

உடங்கு உயிர் வாழ்க என்று உள்ளம் கசிந்து உக
தொன்று காலத்து நின்று அறம் உரைத்த

குன்ற மருங்கில் குற்றம் கெடுக்கும்
பாத-பங்கயம் கிடத்தலின் ஈங்கு-இது
பாதபங்கய மலை எனும் பெயர்த்து ஆயது
தொழுது வலம் கொள்ள வந்தேன் ஈங்கு இப்
பழுது இல் காட்சியீர்! நீயிரும் தொழும்" என-

அன்று அவன் உரைத்த அவ் உரை பிழையாது
சென்று கைதொழுது சிறப்புச் செய்தலின்
மாதவி ஆகியும் சுதமதி ஆகியும்
கோதை அம் சாயல்! நின்னொடு கூடினர்
அறிபிறப்பு உற்றனை அறம் பாடு அறிந்தனை

பிற அறம் உரைப்போர் பெற்றியும் கேட்குவை
பல் வேறு சமயப் படிற்று-உரை எல்லாம்
அல்லி அம் கோதை! கேட்குறும் அந் நாள்
இளையள் வளையோள் என்று உனக்கு யாவரும்
விளை பொருள் உரையார் வேற்று உரு எய்தவும்

அந்தரம் திரியவும் ஆக்கும் இவ் அருந் திறல்
மந்திரம் கொள்க' என வாய்மையின் ஓதி
'மதி நாள் முற்றிய மங்கலத் திருநாள்
பொது அறிவு இகழ்ந்து புலம் உறு மாதவன்
திருவறம் எய்துதல் சித்தம் என்று உணர் நீ

மன் பெரும் பீடிகை வணங்கினை ஏத்தி
நின் 'பதிப் புகுவாய்" என்று எழுந்து ஓங்கி

Scanned with CamScanner

'மறந்ததும் உண்டு' என மறித்து ஆங்கு இழிந்து
'சிறந்த கொள்கைச் சேயிழை! கேளாய்
மக்கள் யாக்கை உணவின் பிண்டம்

இப் பெரு மந்திரம் இரும் பசி அறுக்கும்' என்று
ஆங்கு அது கொடுத்து ஆங்கு அந்தரம் எழுந்து
நீங்கியது ஆங்கு நெடுந் தெய்வம்-தான்-என்.

Scanned with CamScanner

## மணிமேகலை - கதை

### 1. விழாவறை காதை

தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் காலத்திலிருந்தே இந்திரவிழா காவிரிப் பூம்பட்டினத்தில் சிறப்பாக நடைபெற்று வந்தது. இவ் விழாவுக்கு மூலகாரணமாக இருந்தவர் அகத்திய முனிவர். இவ் விழாவின் சிறப்பினை உணர்ந்த சமயக் கணக்கரும் மற்றவரும் ஒருங்கு கூடினர். 'இந்திர விழாவினை மறந்தால், நாளங்காடிப் பூதம் துன்பம் செய்யும்; நரகரைப் புடைத்துண்ணும் சதுக்கப் பூதமும் நகரை விட்டு நீங்கும். ஆதலின் இந்திர விழாவினைச் செய்வோம்' என முடிவு செய்தனர். செய்தியை எங்கும் பறை அறைந்து தெரிவிக்குமாறு ஆணையிட்டனர். முரசறைவோன், வச்சிரக் கோட்டத்தில் இருந்த முரசை யானையின் பிடரினில் ஏற்றினான்; மழையையும் அரசனையும் வாழ்த்தினான். பின், "இந்திர விழா நாட்களில் பொன்னகர் வறிதாகுமாறு தேவர்கள் அனைவரும் இங்கு வந்து விடுவர். ஆதலால் நகரில் உள்ளவர்களே, நிறை குடம், பொற் பாலிகை, பாவை விளக்கு, வாழை, கமுகு, கரும்பு, முத்து மாலை, தோரணம் முதலியவற்றை அழகுடன் பொருத்தமான இடங்களில் அமைத்து அழகு செய்யுங்கள்! சிவபெருமான் முதல் சதுக்க பூதம் வரையுள்ள தெய்வங்களுக்கு முறையாக வழிபாட்டினைச் செய்யுங்கள். அவையில் புண்ணிய நல்லுரை பகர்மின்! பட்டிமண்டபம் பாங்கு அறிந்து ஏறுமின்! யாரிடமும் செற்றம் வேண்டாம்!" எனக் கூறி முரசறைந்தான்.

### 2. ஊரலருரைத்த காதை (ஊர் அலர் உரைத்த காதை)

இந்திர விழா நடந்தேறியது. ஆயின், மாதவியும் மணிமேகலையும் இவ் விழாவிற்கு வரவில்லை. இதனால் மனம் வருந்தினாள் மாதவியின் தாய் சித்திராபதி. அவள் வயந்தமாலை என்னும் மாதவியின் தோழி ஒருத்தியை அழைத்து, 'ஊரார் உரைக்கும் பழி மொழியை மாதவிக்கு உரைப்பாயாக!' எனக் கூறி அனுப்பினாள். அவள் உடனே மாதவி, மணிமேகலை இருக்கும் இடத்தை அடைந்தாள்.

Scanned with CamScanner

"மாபுகழ் ஏற்ப நீ ஆடல் நிகழ்த்த இந்திர விழாவிற்கு வாராததாலும், தவ ஒழுக்கம் மேற்கொண்டதாலும் ஊரார் பழி கூறுகின்றனர்" என்றாள். அதுகேட்ட மாதவி, 'மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகளான மணிமேகலை தவத்திற்கு உரியவளாவாள். பரத்தமைத் தொழிலுக்கு உரியவளல்லள். ஆதலால் இனி அங்கு வரமாட்டாள். நான் இங்கு அறவண அடிகளின் திருவடியில் வீழ்ந்து வணங்கி நல்லறம் கேட்டேன். அப்பெருமான் எனக்கு வாய்மை முதலான அறங்களை அருளிச் செய்தார். ஆதலின் நானும் அங்கு வரமாட்டேன்! இச் செய்தியை என் தாயிடம் கூறுவாயாக!' என்று உரைத்தாள். அதுகேட்ட வயந்தமாலை வருத்தத்துடன் சித்திராபதியிடம் சென்றாள்.

## 3. மலர் வனம் புக்க காதை

மணிமேகலை, தந்தை கோவலனுக்கும் தாய் கண்ணகிக்கும் நேர்ந்த கொடுமைகளைக் கேட்டுக் கண்ணீர் சிந்தியதால், தான் தொடுக்கும் மாலை தூய்மை இழந்தது. இதனை நினைவுபடுத்திய மாதவி, மணிமேகலையின் கண்ணீரைத் துடைத்தாள். மணிமேகலையை நோக்கி, "இம் மாலை உன் கண்ணீரால் தூய்மை இழந்தது. ஆதலால் வேறு மாலை தொடுத்தற்கு மலர்களைக் கொண்டு வருவாயாக!" எனப் பணித்தாள். அப்பொழுது உடனிருந்த சுதமதி, "மகளிர் தனியாக மலர் வனம் செல்லுதல் கூடாது. அதனால் துன்பம் நேரும். எனக்கு அத்தகைய துன்ப அனுபவம் உண்டு. ஆதலால் மணிமேகலை தனியாகச் சென்று மலர் பறித்தல் நன்றன்று. மேலும் மலர் கொய்ய இலவந்திகைச் சோலைக்குச் செல்லக் கூடாது. காரணம், அரசனின் பக்கத்தில் உள்ளவர் அங்கு இருப்பர்; உய்யானத்தில் சென்று பறிக்கலாம் என்றாலோ கையில் பாசமுடைய பூதம் அதனைக் காத்து நிற்கும். ஆதலால் அறிவுடையோர் அங்குச் செல்லார்: சம்பாபதி வனமும் கவேர வனமும் தெய்வங்களால் காக்கப்படுதலின், அந்த இடங்களுக்கும் அறிவுடையோர் செல்லார். புத்த தேவன் ஆணையால் எப்போதும் பூத்துக் குலுங்கும் உவவனம் என்பது ஒன்று உண்டு. அங்குப் பளிங்கு மண்டபம் ஒன்று உள்ளது. அந்த உவவனத்திற்குத்தான்

மணிமேகலை செல்வதற்கு உரியவள். அவளுக்குத் துணையாக நானும் செல்வேன்" என மாதவியிடம் கூறினாள்.

மணிமேகலையும் சுதமதியும் வீதியில் சென்றனர். அப்படிச் செல்லும்பொழுது பல்வேறு மக்கள் பல்வேறு காட்சிகளைக் கண்டு நின்றனர். அவ்வாறு நின்றவர்கள் மணிமேகலையைக் கண்டு வியப்படைந்தனர். அவர்கள் முன்பு விராட நகரில் பேடி வேடம் கொண்டு சென்ற அர்ச்சுனனைச் சூழ்ந்து நின்று ஆரவாரம் செய்த மக்களைப் போன்று மணிமேகலையைச் சூழ்ந்து கொண்டு, "இவ்வளவு பேரழகு மிக்க இவளைத் தவநெறிப்படுத்திய தாய் கொடியவள்" என்று கூறி மணிமேகலையின் அழகினைப் பாராட்டி உரைத்தனர். இந்நிலையில் சுதமதியும் மணிமேகலையும் உவவனம் சென்றடைந்தனர்.

## 4. பளிக்கறை புக்க காதை

உவவனத்தின் அழகிய காட்சிகளைச் சுதமதி சுட்டிக் காட்ட மணிமேகலை கண்டு உவந்தவளாயினள். இங்ஙனம் இவ்விருவரும் இங்கே இருக்க வேறொரு நிகழ்ச்சி வீதியில் நிகழ்ந்தது. கால வேகம் என்னும் யானை மதவெறி கொண்டு வீதிதோறும் திரிந்து மக்களை அச்சுறுத்தியது. தானை சூழ வந்து அதன் மதத்தை அடக்கிய மன்னர் மகன் உதயகுமரன் ஒரு கணிகையர் வீதி வழியே சென்றான். அப்போது ஒரு மாடத்தில் மகர யாழின் கோட்டினைத் தழுவிக் கொண்டு மயங்கிக் கிடந்த எட்டி குமரனைச் சாளர வழியாகக் கண்டான். அவனை நோக்கி, "இப்படி நீ மயங்கி யிருக்கக் காரணம் என்ன?" என்று வினவினான். அது கேட்டதும் அவன் விரைந்து எழுந்து உதயகுமரனைப் பணிந்து, "இவ்வீதி வழியாக மலர் வனம் சென்ற மணிமேகலையைக் கண்டேன். கண்டதும் கோவலனுக்கு நேர்ந்த கொடுமையை நினைந்தேன். நெஞ்சழிந்தேன்; துயரம் போக்க இவ் யாழ் நரம்பில் என் கை விரல்கள் செல்ல நான் மயங்கிக் கிடக்கிறேன். இதுவே நானுற்ற துன்பம்" என்றான். பல நாட்களாக மணிமேகலையை விரும்பியிருந்த உதயகுமரன் அது கேட்டுத் துள்ளி எழுந்தான். "அவளை எனது தேரின் மீது ஏற்றிக் கொணர்வேன்" என அவனிடம் கூறி உவவனத்தை அடைந்தான்.

Scanned with CamScanner

உதயகுமரனின் தேரொலியைக் கேட்ட மணிமேகலை சுதமதியை நோக்கி, "மன்ன குமரனுக்கு என்னிடம் விருப்பம் உண்டு என்பதனை நான் முன்னரே கேள்வி யுற்றேன். இப்போது அவன் தேரொலி கேட்கிறது. என்ன செய்வது?" என்றாள். உடனே சுதமதி மணிமேகலையைப் பளிக்கறையின் உள்ளே அனுப்பி அதனைத் தாழிட்டுக் கொண்டு இருக்கச் செய்து, தான் சற்றுத் தொலைவில் நின்றாள். அவ்வாறு நின்றவளைக் கண்டதும் உதயகுமரன் தேரை நிறுத்திக் கீழே இறங்கி அவளை நோக்கி மணிமேகலையிடம் தான் கொண்ட வேட்கை புலப்படப் பலப்பல மொழிந்தான். சுதமதி மிகவும் வருந்தி அவனை நோக்கி, "புகழ்மிக்க கரிகாற் பெருவளத்தான் பெரு மரபிலே வந்தவனாகிய உனக்கு மகளிர் அறிவுரை கூறத் தகுமா? ஆயினும் ஒன்று சொல்வேன்: மக்கள் யாக்கையின் இழிதகைமையை நன்கு உணர்வாயாக!" என்றாள். இவ்வுரை அவனது காதில் புகுவதற்குள் அவன் கண்கள் பளிக்கறையினுள் இருந்த மணிமேகலையின் உருவத்தைப் பார்த்து விட்டன.

## 5. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை

பளிக்கறையின் உள்ளே புகுதற்கு வாயிலை அறியா தவனாய்ப் பளிக்குச் சுவரினைக் கையால் தடவிக் கொண்டு வருபவன், சுதமதியை நோக்கி, "மணிமேகலை எந்நிலையில் இருக்கிறாள்?" என வினவினான். அதற்குப் பதில் உரையாகச் சுதமதி, "மணிமேகலை தவநெறியை மேற் கொண்டிருக்கிறாள்; நீ அவளை விரும்புதல் சரியன்று" என்று கூறினாள். ஆயினும் உதயகுமரன் தன் உள்ளத்தை மாற்றிக் கொள்ள விரும்ப வில்லை. "எப்படியும் நான் அவளை அடைவேன்" என்று கூறிச் சித்திராபதியின் உதவியை நாடிச் சென்றான். சென்றவுடன் மணிமேகலை பளிக்கறையிலிருந்து வெளியே வந்து சுதமதியை நோக்கி, "அன்பில்லாதவள்; தவ உணர்ச்சி அற்றவள்; பொருள் விலையாட்டி என்று என்னை எப்படி இகழ்ந்தாலும், அப் புதியோன் பின்றைப் போனது என் நெஞ்சம்; இதுவோ அன்னாய் காமத்து இயற்கை; இதுவே யாயின் கெடுக அதன் திறம்" என்று தன் உள்ள உறுதி வெளிப்படக் கூறி நின்றாள். அப்பொழுது இந்திர

Scanned with CamScanner

விழாவினைக் காண வந்த மணிமேகலா தெய்வம், மேல் எழும்பிப் பலவாறு போற்றித் துதித்தது. பகல் கழிந்தது; மாலை வந்தது.

## 6. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை

மாலையும் மறைந்தது. முழு நிலா பால்போலும் தண் கதிர்களை எங்கும் பரப்பியது. மணிமேகலா தெய்வம் மறுபடியும் புத்த தேவரின் பாதபீடிகையைத் தொழுது வணங்கியது. அருகில் இருந்த சுதமதியை நோக்கி, "உங்களுக்கு நேர்ந்த துன்பம் யாது? ஏன் இங்கு நிற்கின்றீர்கள்?" என வினவியது. சுதமதி உதயகுமரன் வந்து சென்றதை உரைத்தாள். உரைத்ததும் மணிமேகலா தெய்வம் அவளை நோக்கி, "உதயகுமரனுக்கு மணிமேகலையிடம் உள்ள விருப்பம் இன்னும் அகலவில்லை. அறவோர் உறைவிடம் ஆதலின் இங்கிருந்து அவன் போய் விட்டான். ஆயின் வீதியில் மணிமேகலை சென்றால் அவளை அகப்படுத்துவான். ஆகையால் நீங்கள் மேற்றிசை வாயிலாக வெளியே சென்று மாதவர் உறையும் சக்கரவாளக் கோட்டத்தை அடையின், உங்களுக்கு எத்தகைய துன்பமும் வராது. அங்கே செல்லுங்கள்" என்று கூறியது. அதுகேட்ட சுதமதி, "யாவரும் அதனைச் சுடுகாட்டுக் கோட்டம் என்று கூறுவர். நீ சக்கரவாளக் கோட்டம் என்று கூறக் காரணம் யாது?" என வினவினாள். அதற்கு விடை கூறும்போது அத் தெய்வம், காவிரிப் பூம்பட்டினம் தோன்றிய காலத்தில் உடன் தோன்றியதான அப் புறங்காட்டின் இயல்புகள் அனைத்தையும் விரிவாகக் கூறியது. அப் புறங்காட்டில் தனியாகச் சென்ற சார்ங்கலன் என்னும் தன் மகன் பேயால் தாக்கப்பட்டு இறந்துபட்டனனே எனப் பெரிதும் வருந்தினாள் கோதமை என்னும் தாய். அத் தாயின் முறையீட்டைக் கேட்டுச் சம்பாபதி என்னும் தெய்வம் கோதமையை நோக்கி, "உன் மகன் பேயால் இறக்கவில்லை; ஊழ்வினை காரணமாக இறந்தான்; உன் உயிரைக் கவர்ந்து கொண்டு அவன் உயிரை அளித்தல் இயலாத ஒன்று; ஒருவர் உடம்பிலிருந்து பிரியும் உயிர் வினைவழியே சென்று வேறொரு பிறப்பை அடையும். உலகாளும் மன்னர்கூட இதற்கு விலக்கல்லர். இச் சக்கரவாளத்தில் உள்ள தேவர்களில்

Scanned with CamScanner

யாரேனும் நீ கேட்ட வரம் தருவாராயின், என்னாலும் அப்படி ஒரு வரத்தைத் தர முடியும்" என்று உரைத்தது. பின் சக்கரவாளத்தில் உள்ள வரம் கொடுக்கும் ஆற்றலுடைய தேவர்களை எல்லாம் அழைத்துக் கோதமையின் துன்பத்தை எடுத்துக் கூறியது. அத் தேவரும் சம்பாதி கூறியதையே கூறினர். அதனைக் கேட்ட கோதமை ஒருவாறு துன்பம் நீங்கி மகனைப் புறங்காட்டில் இட்டு இறந்து விட்டாள். பின் அச் சம்பாபதியின் ஆற்றலை யாவர்க்கும் தெரிவிக்க வேண்டி மயனால் அமைக்கப்பட்டது இச் சக்கரவாளக் கோட்டம். இது சுடுகாட்டு மதிற்புறத்தே உள்ளதால் இதற்குச் 'சுடு காட்டுக் கோட்டம்' என்ற பெயரும் உண்டு" என உரைத்தது மணிமேகலா தெய்வம். அதுகேட்ட மணிமேகலை, 'மக்கள் வாழ்க்கை இப்படிப் பட்டதா!' என வியந்தாள். அந்நேரம் சுதமதி தூங்கிக் கொண்டிருந்தாள். அப்போது மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிக் கொண்டு ஆகாய வழியே சென்று மணிபல்லவம் என்னும் தீவில் அவளை விட்டு விட்டு அகன்றது.

### 7. துயில் எழுப்பிய காதை

மணிபல்லவத்தில் மணிமேகலையை விட்டுச் சென்ற மணிமேகலா தெய்வம், உதயகுமரன் முன் தோன்றி, "தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த, அவத் திறம் ஒழிக" என்று அவனுக்கு அறிவுரை வழங்கியது. பின் உவவனம் சென்று அங்குத் தூங்கிக் கொண்டிருக்கும் சுதமதியை எழுப்பி, "நான் மணிமேகலா தெய்வம்; மணிமேகலைக்கும் புத்த தேவனின் அறநெறியில் செல்லும் காலம் வந்துற்றதாதலின், அவளை மணிபல்லவத்தில் கொண்டு சேர்த்துள்ளேன். அவள் தனது பழம் பிறப்பினை உணர்ந்துகொண்டு இன்றைக்கு ஏழாவது நாளில் இங்கு வருவாள். இந்நகரில் வேறு வடிவத்துடன் இருப்பாள். ஆயினும் உனக்கு அப்படியின்றி இயல்பாகவே தோன்றுவாள். அவள் இங்கு வரும் நாளில் பல அற்புதங்கள் நிகழும். நான் இங்கு வந்ததும், மணிமேகலை நல்வழியில் சென்றதுமாகிய செய்திகளை மாதவிக்குச் சொல்வாயாக! அவள் என்னை முன்னரே அறிந்தவள்தான்! கோவலன் என் பெயரை இவளுக்கு இட்ட நாள் இரவில் மாதவியின்

Scanned with CamScanner

களவிற் சென்று, 'காமன் செயலற்று ஏங்க, மாபெரும் தவக் கொடி ஈன்றனை' என்று கூறினேன்" எனச் சொல்லி மணிமேகலா தெய்வம் மறைந்தது.

இது கேட்ட சுதமதி மணிமேகலையின் பிரிவால் பெரிதும் வருந்தினாள். சக்கரவாளக் கோட்டம் அடைந்து அங்கு ஒரு புறம் இருந்தாள். அப்பொழுது ஒரு தெய்வப்பாவை தோன்றி அவளது முற்பிறப்பு, இப்பிறப்பு வரலாற்றினைக் கூறி அழைத்தது. 'மணிமேகலை இன்றைக்கு ஏழாம் நாளில் இந் நகருக்கு வருவாள்; அவளது பிரிவுக்காக வருந்த வேண்டாம்' என்று கூறிற்று. தெய்வம் தேற்றியும் துயரம் குறையாத சுதமதி மாதவியை அடைந்து நடந்ததை எல்லாம் சொன்னாள். மகளின் பிரிவுத் துன்பம் தாங்காத மாதவி மாணிக்கத்தை இழந்த நாகம் போல் பெருந் துயரம் அடைந்தாள். இன்னுயிர் இழந்த யாக்கைபோலச் சுதமதி செயலற்றவள் ஆனாள்.

### 8. மணிபல்லவத்துத் துயருற்ற காதை

புகாரில் சுதமதி இவ்வாறு செயலற்றிருக்க, மணிபல்லவத்தில் கடற்கரை மணலில் துயில் நீங்கி எழுந்த மணிமேகலை, கண் எதிரில் காண்பவை அனைத்துப் பொருள்களும் புதியனவாக இருக்கப் பெரிதும் மருட்சி உற்றாள். முன்னர்க் கேட்ட குரல் எதுவும் கேட்கவில்லை; பார்த்த முகமும் தென்படவில்லை. அவளது திகைப்பும் வியப்பும் அதிகமாயிற்று. "இது என்ன, உவவனத்தில் முன்னர்க் காணாத ஒரு பகுதியா? இது கனவோ, நனவோ ஒன்றும் அறியாது மயங்குகிறேனே! சுதமதி, எங்குச் சென்று ஒளிந்து கொண்டாய்? ஒரு பதிலும் கூறமாட்டாயா? தனியாக இருக்க அஞ்சுகிறேன்! விரைந்து வா!" எனக் கூறி எங்கும் தேடி அலைந்து அயர்ந்தாள். தன் தந்தை கோவலனை நினைந்து ஏங்கினாள். "வேற்று நாடடைந்து, வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்து, ஐயாவோ!" என அழுதாள். அவ்வாறு அழும்போது, திரிசிப்போர்க்குப் பழம் பிறப்பை உணர்த்தும் புத்த பீடிகை தோன்றியது.

### 9. பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

பீடிகையைக் கண்ட மணிமேகலை மெய்மறந்து அதனை வணங்கி மும்முறை வலம் வந்தாள். அதன் காட்சியால் தன்

Scanned with CamScanner

பழம்பிறப்பின் நிகழ்ச்சிகளை உணர்ந்தாள். "மாதவனே! நீ காயங்கரை என்னும் நதிக்கரையில் உரைத்தது எல்லாம் உண்மை ஆதலை உணர்ந்தேன். காந்தார நாட்டு மன்னனாகிய அத்திபதி என்பானுக்கு மைத்துனனாகிய பிரமதருமனே! நீ அவனுக்கு அறம் உரைக்கும்போது, 'இற்றைக்கு ஏழாம் நாளில் இந் நாவலந் தீவில் பூகம்பம் உண்டாகும். அதனால் இந் நகரமும் நாக நாட்டில் பெரும் பரப்பும் பாதலத்தில் வீழ்ந்து அழியும். ஆதலால் இந் நகரினின்றும் நீங்குக!" என்று கூறினாய். அதன்படி அரசன் நகரை விட்டுச் சென்று காயங்கரையின் கரையில் இருந்தபோது, நீ குறித்த நாளில் குறித்தவாறு நகர் அழிந்தது. அது கண்ட வேந்தனும் பிறரும் நின்னைச் சூழ்ந்து வணங்க, நீ அவர்களுக்கு அறம் உரைத்துக் கொண்டிருந்தாய்! அப்பொழுது அசோதர நகர மன்னன் மகளாகப் பிறந்த நான், இலக்குமி என்னும் பெயர் பெற்று, அத்திபதி அரசன் மகன் இராகுலனுக்கு மனைவி யாகி, நின்னை வணங்கி அறம் கேட்க அங்கு வந்தேன். நீ என்னைப் பார்த்து 'இற்றைக்குப் பதினாறாம் நாளில் இவ் இராகுலன் திட்டிவிடம் என்னும் பாம்பால் இறப்பான். நீ இவனுடன் தீயில் புகுந்து இறந்து, காவிரிப் பூம்பட்டினத்தில் பிறப்பாய்.. அங்கு உனக்கு ஒரு துன்பம் நேரும். அப்பொழுது மணிமேகலா தெய்வம் வந்து நள்ளிரவில் உன்னைத் தூக்கிச் சென்று ஒரு தீவில் வைத்து அகலும். அகன்றபின் அங்கே உள்ள புத்த பீடிகையைக் கண்டு தொழுவாய்; உடனே உனது முற்பிறப்பின் நிகழ்ச்சிகளை அறிந்து, இப்போது நான் உரைத்தவற்றைப் புரிந்து கொள்வாய்" என்று கூறினாய். பின், 'என் காதலன் பிறப்பினையும் தெரிவிக்க வேண்டும்' என்று நான் உன்னை வேண்டினேன். நீயோ, 'உன்னைத் தூக்கிக் கொண்டு சென்ற தெய்வம் மறுபடியும் தோன்றி உனக்கு அதனைத் தெரிவிக்கும்' என உரைத்தாய். (பழம் பிறப்பில் பிரமதருமன் என்னும் முனிவன் கூறியவற்றைப் புத்த பீடிகைக் காட்சியால் அறிந்து மணிமேகலை அவன் எதிரில் நிற்பதாக நினைந்து கூறியவை) பின் மணிமேகலை, 'அத் தெய்வம் இப்பொழுது வராதோ?' என ஏங்கி அழுது கொண்டிருந்தாள்.

Scanned with CamScanner

## 10. மந்திரம் கொடுத்த காதை

மணிமேகலை இவ்வாறு அழுது கொண்டிருக்கையில், 'புத்தபீடிகையைக் கண்டதால் இவள் தன் பழம் பிறப்பு அறிந்தாள். இவள் இயல்பும் அழகாக இருக்கிறது' என்று எண்ணியவாறு மணிமேகலா தெய்வம் வானத்திலிருந்து இறங்கி வந்தது. புத்த பீடிகையைப் புத்தராகவே கருதித் துதித்து வலம் வந்து வணங்கியது. வணங்கிய தெய்வத்தை வணங்கிய மணிமேகலை, "உனது திருவருளால் எனது பழம் பிறப்பு உணர்ந்தேன். என் கணவன் எங்கே இருக்கிறான்?" என வினவினாள். அத் தெய்வம், "இலக்குமியே, கேட்பாயாக! நீ ஒருநாள் ஒரு பொழிலில் இராகுலனுடன் ஊடல் கொண்டிருந்தாய்! உனது ஊடலைத் தீர்ப்பதற்கு உனது அடிகளில் வீழ்ந்து வணங்கினான். அப்போது சாதுசக்கரன் என்னும் பௌத்த சாரணமுனிவர் விண்ணிலிருந்து இறங்கி வந்தார். நீ அவரைக் கண்டதும் மெய்மறந்து பணிந்து வணங்கினாய். அது கண்ட இராகுலன், 'இவன் யார்?' என வெகுண்டு உரைத்தான். நீ அவன் வாயைப் பொத்தி, 'இச் சான்றோனுடைய திருவடிகளைப் போற்றித் துதி செய்யாது பிழை செய்துவிட்டாய்' என்று கூறினாள். பின் நீங்கள் இருவரும் அம் முனிவரின் திருவடிகளை வணங்கி, 'அம் தீந் தண்ணீர் அமுதொடு கொணர்ந்துள்ளோம்; அமுது செய்தருள வேண்டும்' என்று வேண்டி உண்பித்தாய்! அந்நாள் நீ செய்த ஆகார தானம் உனது பிறப்பை அறுத்திடும். அந்த இராகுலன் தான் உதயகுமரன் என்பதனை அறிவாயாக! அதனால்தான் அவன் உன்னை விரும்பினான். உன் மனமும் அவன் பின்னே சென்றது. இது தொடராமல் தடுக்கவே உன்னை இத் தீவில் கொணர்ந்து வைத்து, இப் பீடிகையை உனக்குக் காட்டினேன்.

"இன்னும் கேட்பாயாக! பண்டைப் பிறவியில் உனக்குத் தமக்கையராக இருந்த தாரையையும் வீரையையும் அங்க நாட்டு மன்னன் மணம் செய்து கொண்டான். ஒருநாள் அவன் அவர்களுடன் சென்று மலை வளம் கண்டு கங்கைக் கரையை அடைந்தான். அப்போது அறவணவடிகள் அங்கு வரக் கண்டு அவரை வணங்கினான். "இங்கு எழுந்தருளியுள்ள

தங்களை யார் என்று தெரிந்து கொள்ளலாமா?" என வினவினான். அதற்கு அவர், "பாதபங்கய மலையைத் தொழுது வணங்க வந்தேன்; முன்னொரு காலத்தே புத்தர் பிரான் அம் மலையின் உச்சியில் நின்று அறம் உரைத்த பொழுது, அவரது அடிச்சுவடு பொருந்தியமையால், அம் மலை அப் பெயரைப் பெற்றது. நீங்களும் அதனைப் போற்றி வழிபடுங்கள்" என்று கூறினார். அப்படித் தொழுததன் பயனாகத் தாரையும் வீரையும் முறையே மாதவியும் சுதமதியும் ஆகப் பிறந்து உன்னுடன் சேர்ந்துள்ளனர். நீ பழம் பிறப்பினை அறிந்து கொண்டாய்; அறத்தினது சிறப்புனையும் அறிந்தாய்; பிற சமயக் கருத்துகளையும் சமயவாதிகளிடம் கேட்பாயாக! அப்படிக் கேட்குங்காலை, 'இளம் வயது நங்கை' எனக் கருதி உனக்கு அவர்கள் தம் சமய உண்மைகளைக் கூற மாட்டார்கள். ஆதலால், நீ வேற்று வடிவம் கொள்வதற்குரிய மந்திரங்களை உனக்குக் கற்றுத் தருகிறேன். அதனுடன் வானில் இயங்குவதற்குரிய மந்திரத்தையும் சொல்லித் தருகிறேன்" என அவற்றை அத் தெய்வம் அருளியது. நீ புத்தர் அருளிய திருவறம் கருதுவாயாக!" எனக் கூறி விண் வழியே செல்லக் கிளம்பி, எதையோ மறந்தது போல மீண்டும் கீழே இறங்கி, 'உனக்கு ஒன்று சொல்ல மறந்து விட்டேன்; மக்கள் யாக்கை உணவின் பிண்டம்; இந்தச் சிறந்த மந்திரம் மிக்க பசியைப் போக்கும்' என அதனையும் அருளிச் செய்து விண்ணில் சென்றது.

11. பாத்திரம் பெற்ற காதை